Find us on facebook/tamilmirror
Follow us on tamilmirror
epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JUNE 30, 2022

வியாழக்கிழமை ஜூன் 30, 2022 | ஒளி: 08 கதிர்: 036 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

# 22 வரையிலும் பெற்றோல் இல்லை

## ஜூலை 2ஆம் வாரம் டீசல் என்கிறார் சாகல



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் ஜூலை 22 ஆம் திகதி வரை பெற்றோல் இறக்குமதியை பெற்றுக்கொள்ள முடியாது என்று பிரதமரின் பணியாள்தொகுதி தலைமை அதிகாரியும் முன்னாள் அமைச்சருமான சாகல ரத்நாயக்க, நேற்று (29) தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் நிதி இருந்தாலும் எரிபொருள் இறக்குமதியை பெற முடியாது என்று தெரிவித்த அவர், ஜூலை 11ஆம் திகதிக்கும் 15ஆம் திகதிக்கும் இடையில் 38,000 மெற்றிக் தொன் டீசல் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது 11,000 மெற்றிக் தொன் டீசல், 5,000 மெற்றிக் தொன் பெற்றோல், 30,000 மெற்றிக் தொன் உலை எண்ணெய் மற்றும் 800 மெற்றிக் தொன் விமானங்களுக்கான எரிபொருள் இருப்பதாக சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

---

பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தை

## விற்க விடமாட்டோம்

### எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

நாட்டில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ள வேளையில், அந்நெருக்கடியை பொருட்டாக வைத்து, நாட்டின் பெறுமதியான வளங்களில் ஒன்றான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை, வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய ராஜபக்ஷ குடும்பத்தினர் தலைமையிலான இந்த அரசாங்கத்தின் முயற்சிகளை வன்மையாக கண்டிப்பதாகவும், இதில் சம்பந்தப்படும் சகல அமைச்சர்கள் மற்றும் செயலாளர்கள் ஐக்கிய மக்கள் சக்தியால் அமையப்பெறும் அரசாங்கத்தின் கீழ், சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

---

## 10 வரை 10% பஸ்கள்

ஜூலை 10ஆம் திகதி வரை, 10 சதவீத தனியார் பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

---

எரிபொருள் கொள்வனவுக்கு

## அமீரகம் செல்கிறார் ஜனாதிபதி கோட்டா

எரிபொருள் கொள்வனவு செய்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எதிர்வரும் காலங்களில் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

---

## பெருந்தோட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குங்கள்

### பிரதமருக்கும் இந்திய உயர்ஸ்தானிகருக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணி கோரிக்கை

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பெருந்தோட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குமாறு தமிழ் முற்போக்கு கூட்டணி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இந்திய உயர்ஸ்தானிகருக்கும் கோரிக்கை ஒன்றினை முன்வைத்துள்ளது.

தொடர்ச்சி P2

---

எரிபொருள் நெருக்கடி

## ரயில் சேவைகள் ரத்து; மக்கள் பலர் அல்லல்

எரிபொருள் இல்லாததன் காரணமாக, ரயில்வே திணைக்கள ஊழியர்கள் தமது பணியிடங்களுக்குச் செல்ல முடியாமையால் ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்த திணைக்களத்தின் பிரதிப் பொது முகாமையாளர் (போக்குவரத்து) காமினி செனவிரத்ன, எதிர்வரும் நாள்களில் மேலும் பல ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்படலாம் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

---

அரசியல் கைதிகள் – இராணுவத்தை

## பொதுமன்னிப்பில் விடுவிக்கவும்

### 'ஒரு நாடு – ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணி பரிந்துரை

'ஒரு நாடு - ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணி அதன் அறிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேற்று (29) காலை கையளித்துள்ளது. 'ஒரே நாடு ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் தலைவர் ராஜகீய பண்டித வணக்கத்துக்குரிய கலகொட அத்தே ஞானசார தேரர் இந்த அறிக்கையை ஜனாதிபதியிடத்தில் கையளித்துள்ளார்.



செயலணியின் அறிக்கையில் முக்கியமான இரண்டு விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

---

## யாழில் கடவுச்சீட்டு

### 'சொந்த நிதியில் அலுவலகம் திறக்கவுள்ளேன்" என்கிறார் அமைச்சர் தம்மிக

எதிர்வரும் திங்கட்கிழமை (04) முதல், கடவுச்சீட்டு வழங்கும் ஒரு நாள் சேவை மேலும் மூன்று மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்த முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா, தனது சொந்த நிதியைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலக கிளையைத் திறக்கவுள்ளதாக, நேற்று (28) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

---

## ஆளுநராக நந்தலாலுக்கு பிரதமர் சிபாரிசு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக கலாநிதி நந்தலால் வீரசிங்கவை சிபாரிசு செய்து, நிதியமைச்சர் என்ற முறையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

ஆளுநர் கலாநிதி நந்தலாலின் பதவிக்காலம் விரைவில் நிறைவடையவிருக்கும் நிலையிலேயே அவரது சேவையை தொடர்வதற்கு பிரதமர் சிபாரிசு செய்துள்ளார்.

---

கந்தக்காடு நிலையத்தில் களேபரம்:

## கதவுகளை உடைத்து 600 பேர் கம்பிநீட்டினர்

வெலிகந்த, கந்தக்காடு பகுதியில் உள்ள சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து சுமார் 600 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ, நேற்று (29) தெரிவித்தார்.

சிகிச்சைக்காக புனர்வாழ்வு நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட போதைக்கு அடிமையான கைதியொருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (28) ஏற்பட்ட இச்சம்பவத்தைத் தொடர்ந்து பதற்றநிலை ஏற்பட்டுள்ளதுடன், மரணம் குறித்து விசாரணை நடத்துவதற்காக வெலிகந்தை பொலிஸ் நிலையத்தில் இருந்து குழுவொன்று வளாகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

---



"ஆபிரிக்க நாடுகளின்

## நல்லிணக்க அனுபவங்களை அறிந்துகொள்ள ஆர்வமாக உள்ளோம்" –ஜீ.எல் பீரிஸ்

நல்லிணக்கம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இலங்கை முன்னெடுத்த பல நடவடிக்கைகள் குறித்தும், ஆபிரிக்க நாடுகளின் நல்லிணக்க அனுபவங்களை அறிந்து கொள்வதில் இலங்கை ஆர்வமாக இருப்பதாக, 2022ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை அடிப்படையாக கொண்டு, வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் பொதுநலவாய உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் குழுத் தலைவர்கள் சந்திப்பில், வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

---

இரண்டு அல்லது மூன்று வாரங்களில்

## பிரதமரின் புதிய வேலைத்திட்டம்

வீழ்ச்சியடைந்து வரும் நாட்டின் பொருளாதாரத்தை 2023ஆம் ஆண்டளவில் மீட்டெடுக்கவும், 2024, 2025 ஆம் ஆண்டளவில் நாட்டை அடுத்த கட்டத்திற்கு உயர்த்தவும் வெளிநாட்டு உதவிகள் அவசியம் எனவும், நாட்டின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் வெளிநாடுகளின் உதவிகளை பெற்றுக்கொள்ளும் நகர்வுகள் குறித்து எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் தான் புதிய வேலைத்திட்டம் ஒன்றினை முன்வைப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

---

நாட்டின் பொருளாதார சீரழிவுக்கு

## அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களே காரணம்

### அமெரிக்க உயர்மட்ட இராஜதந்திரிகள் குழுவிடம் எதிர்க்கட்சி எடுத்துரைப்பு

அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களும் பொருத்தமற்ற திட்டங்களுமே நாட்டின் பொருளாதார சீரழிவுக்கு காரணம். நாடு எதிர்கொள்ளும் நிலைமைகள் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்தும் அரசாங்கம் அதனை கவனத்தில் கொள்ளவில்லை என அமெரிக்க உயர்மட்ட இராஜதந்திரிகள் குழுவிடம் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிர்க்கட்சி பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.



தொடர்ச்சி P2

---

## ஜனாதிபதியும் பிரதமரும் பைடனுக்கு நன்றி நவின்றனர்

இலங்கையின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்த மேலதிகமாக 20 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியாக வழங்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ஜி 7 உச்சி மாநாட்டில் அறிவித்திருந்தார். இதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 15 மாதங்களுக்கு தேவையான 800,000ற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கும் 27 ஆயிரம் கர்ப்பிணி தாய்மார்களுக்கும் போசாக்கான உணவிற்காக, 20 மில்லியன் அமெரிக்க டொலர் பணத்தை வழங்க உறுதியளித்துள்ளமைக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்வதாகவும்

தொடர்ச்சி P2

---

சவால்களுக்கு முகங்கொடுக்க

## நட்பு நாடுகளை நாடுகின்றோம்



சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் உள்ளதாகவும், எனினும் ஐ.எம்.எப்பின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ள நீண்ட காலம் தேவைப்படும் எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

கடன் மீள் கட்டமைப்பு குறித்தும், நட்பு நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொள்வது குறித்தும் கூடிய கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள அமெரிக்க இராஜதந்திர உயர்மட்ட குழுவிற்கும் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவிற்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது. இந்தச் சந்திப்பில் இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் எதிர்கால நெருக்கடி நிலைமைகள் குறித்தும் இலங்கை தரப்பினர் நிலைமைகளை எடுத்துக்கூறியுள்ளனர்.

தொடர்ச்சி P2

---

கோட்டா, ரணிலுக்கு எதிரான

## ஆட்டத்தை ஆரம்பிக்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

பா.நிரோஸ்

அரசாங்கத்துக்கு எதிராக நாடு தழுவிய தொடர் போராட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி இன்று (30) முதல் ஆரம்பிக்கவுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தங்களது பதவிகளில் இருந்து விலகும் வரை இப்போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கும் அக்கட்சி தீர்மானித்துள்ளது.

இப்போராட்டம் தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா, நெருக்கடிகளுக்கு அரசாங்கம் தீர்வு காணும் என கடந்த ஓரிரு மாதங்களாக நாம் பொறுமையாக பார்த்துக் கொண்டிருந்தோம்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## விற்க விடமாட்டோம்

எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய முழுமையான செயற்பாட்டின் ஊடாக 100% மண்ணெண்ணெய் தேவையையும்,சுமார் 50% விமானங்களுக்கான எரிபொருள் தேவையையும் 100% நெக்டா தேவையையும் 30% டீசல், 14% பெற்றோல், 8% எரிவாயு, மின் உற்பத்திக்குத் தேவையான பதப்படுத்தல் எரிபொருள் 75-100% வரையான தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய பெறுமதி மிக்க வளமாகும்.

இந்நாட்டிலுள்ள தூரநோக்கற்ற,வினைதிறனற்ற அரச நிர்வாகத்தால் நாட்டில் ஏற்பட்டுள்ள சீர்குலைவின் காரணமாக, இந்தத் தேசிய வளத்தை திருட்டுத்தனமாக ஏலம் விடுவதற்கு முயற்சி செய்வதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அரசுக்குச் சொந்தமான மதிப்புமிக்க நிறுவனங்களை ஏலம் போட முயற்சி நடந்தால்,அதற்கெதிராக கட்சி பேதங்கள் இன்றி ஒரே நிலைப்பாட்டின் கீழ் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தொழிற்சங்க பிரதிநிதிகள் குழுவுடனான சந்திப்பொன்று நேற்று முன்தினம் (28) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நிலைவரம் தொடர்பிலும், இதிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

## 10 வரை...

கொழும்பில் நேற்று (29) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இரண்டு நாள்களுக்கு ஒரு முறை பஸ்களை இயக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ஜூலை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முதல் பஸ் கட்டணத்தை 30 சதவீதம் அதிகரிக்குமாறும் குறைந்தபட்ச கட்டணத்தை 40 ரூபாயாக அதிகரிக்குமாறும் பஸ் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், பஸ்கட்டண திருத்த பரிந்துரை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் போக்குவரத்து அமைச்சிடம் நேற்று (29) கையளிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருள் வழங்கப்படுவதால் மக்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். பொதுப் போக்குவரத்து சேவைகளை நம்பியே மக்கள் பயணங்களை மேற்கொள்கின்ற நிலையில், பஸ்சேவைகள் குறைக்கப்படுவது குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களில் இருந்து தனியார் பஸ்களுக்கு திட்டமிட்டபடி எரிபொருள் கிடைப்பதில்லை என்று தனியார் பஸ் சங்கப் பிரதிநிதிகள், போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவிடம் நேற்றுமுன்தினம் (28) முறைப்பாடு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## அமீரகம் செல்கிறார்...

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை மஹிந்தானந்த எம்.பி குறிப்பிட்டார்.

ஜனாதிபதிக்கும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கும் இடையில் எரிபொருள் கொள்வனவு ஒப்பந்தம் செய்வதற்காக, தொலைபேசியில் உரையாடுவதற்கு வசதியாக இலங்கைக்கான ரஷ்ய தூதுவருடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஜூலை 10ஆம் திகதிக்குப் பின்னர் தொடர்ந்து எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதற்கான விரிவான பொறிமுறையை அரசாங்கம் வகுத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவில் இருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக இந்திய பிரதமர், பெற்றோலிய வள அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் ஜனாதிபதி தொடர்ந்தும் தொடர்பில் இருப்பதாக மஹிந்தானந்த எம்.பி குறிப்பிட்டார்.

இலங்கைக்கு எரிபொருள் இறக்குமதி செய்யும் ஏழு நிறுவனங்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடியதாகவும், எரிபொருள் விநியோகம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

# 22 வரையிலும் பெற்றோல் இல்லை

ஜூலை நடுப்பகுதியில் டீசல் தொகுதி நாட்டுக்கு வரும் வரை தற்போதுள்ள டீசல் கையிருப்பு அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே கிடைக்கும்.

இதேவேளை, அடுத்த நான்கு மாதங்களுக்கு லிட்ரோ நிறுவனம் 100,000 மெற்றிக் தொன் எரிவாயுவை கொள்வனவு செய்யவுள்ளதால், எரிவாயு விநியோகத்தில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது என்றார்.

ஜூலை 6, 10, 16, 19, 21, 31 ஆகிய திகதிகளில் 33,000 மெற்றிக் தொன் எரிவாயு நாட்டை வந்தடையும் என்றும் தெரிவித்தார்.

## பொதுமன்னிப்பில்...

குறிப்பாக யுத்தத்தின் போது கைதுசெய்யப்பட்டுள்ள இரண்டு தரப்பை சேர்ந்த சகலரையும் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய வேண்டும் என 'ஒரு நாடு - ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணி பரிந்துரைத்துள்ளது. குறிப்பாக, தமிழ் அரசியல் கைதிகள் நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களை விடுவிக்குமாறு வடக்கு - கிழக்கின் தமிழ் மக்கள் முன்வைத்து வரும் நீண்டகால கோரிக்கைக்கு அமைவாகவே செயலணி இதனை பரிந்துரைத்துள்ளது.

அதேபோல் மதமாற்ற நடவடிக்கைகளை நிறுத்தும் வகையில் சட்டமூலம் ஒன்றினை கொண்டுவர வேண்டும் எனவும் செயலணி ஜனாதிபதிக்கு பரிந்துரைத்துள்ளது. வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலங்களுக்கு அமையவும் நீண்டகால அவதானிப்பின் அடிப்படையிலும் மதமாற்ற செயற்பாடுகளை தடுக்கும் விதமாக இந்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் செயலணியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பிரதமரின் புதிய...

இது குறித்து தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டம் தொடர்பில் இலங்கையில் கடந்த சில நாள்களாக கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இந்த வேலைத்திட்டங்கள் குறித்து சர்வதேசத்தின் ஆதரவும் ஒத்துழைப்புகளும் கிடைத்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சியினர் முன்னெடுக்கும் வீட்டுத்தோட்ட வேலைத்திட்டங்களுக்கு அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கும் எனவும் தனது திட்டத்தை விட சிறந்த திட்டம் யாரிடமாவது இருந்தால் அதனை பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

## பெருந்தோட்ட மக்களுக்கு...

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையில் பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வேலுசாமி ராதாகிருஷ்ணன், நிர்வாக செயலாளர் மயில்வாகனம் உதயகுமார் ஆகியோர் நேற்று (29) பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்ததோடு, மாலை வேளையில் இந்திய உயர்ஸ்தானிகரையும் சந்தித்தனர்.

சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவர் பழனி திகாம்பரம், மலையக மக்கள் இன்று பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் அவர்களுக்கு முதல்கட்ட நிவாரணமாக கோதுமை மா வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டதாகவும் அதற்கு பிரதமர் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் தரப்பில் இருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார். பெருந்தோட்ட தொழிலாளர்கள் நாள்தோறும் காலையில் வேலைக்கு செல்வதால் அவர்களுடைய இரண்டு வேளை உணவிற்கு கோதுமை மா அதிகம் பயன்படுத்துவதால் முன்னுரிமை அடிப்படையில் நிவாரணமாக கோதுமை மாவை வழங்க கோரிக்கை முன்வைத்துள்ளதாக கூறினார்.

69 ரூபாவுக்கு இருந்த கோதுமை மா ஒரு கிலோ கிராம், இன்று 300 ரூபாய் வரை உயர்ந்துள்ளதால் பெருந்தோட்ட மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக பழனி திகாம்பரம் சுட்டிக்காட்டியுள்ளார். 250,000 பெருந்தோட்ட மக்களுக்கும் நிவாரணமாக கோதுமை மா வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக கூறினார்.

நாடு இக்கட்டான நிலையில் இருந்த போது அதனைப் பொறுப்பேற்க எவரும் முன்வராத நிலையில் ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டதாகவும் ஆனால் உடனடியாக நாட்டை சீரான நிலைக்குக் கொண்டுவர முடியாது எனவும் அதற்கு அவருக்கு காலம் வழங்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

## ஆட்டத்தை ஆரம்பிக்கிறது...

அரசாங்கத்திற்கு தேவையான ஒத்துழைப்பையும் நாம் இதன்போது முழுமையாக வழங்கியிருந்தோம். ஒரு தடவை கூட அரசாங்கத்தின் காலை வாரவில்லை. இனியும் அரசாங்கம் தீர்வை வழங்கும் என்கிற நம்பிக்கை எமக்கு இல்லை என்றார்.

எனவே, கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பிக்கிறோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் வீடு செல்லும் வரை போராட்டத்தை தொடர்வதற்கு தீர்மானித்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.

## யாழில்...

மாத்தறை, கண்டி, வவுனியாவில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கிளை அலுவலகங்களிலேயே ஒரு நாள் சேவை ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையில் மேலும் ஐந்து கிளை அலுவலகங்களைத் திறக்க உத்தேசித்துள்ளதாகவும் அலுவலகங்களை திறக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டியதாகவும் தெரிவித்தார்.

விலைமனுக்கோரல்களை அழைப்பதற்கு ஆறு மாதங்கள் அல்லது அதற்கு மேல் செல்லும் என்பதால் தனது சொந்தப் நிதியைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் முதலாவது கடவுச்சீட்டு அலுவலக கிளையை திறக்கவுள்ளதாகவும் எஞ்சியுள்ள அலுவலகங்களைத் திறப்பதற்கு நன்கொடைகளைப் பெறுவது அல்லது அதற்காக தனது சொந்த நிதியைப் பயன்படுத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியும்...

இவ்வாறு அமெரிக்க உதவிகளை வழங்கியமைக்கான இலங்கை மக்கள் நன்றி தெரிவிப்பதாகவும் ஜனாதிபதி தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ள பிரதமர் ரணில், 'இலங்கைக்கு 20 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கியமைக்காக அமெரிக்க ஜனாதிபதி பைடனுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு வழங்கப்பட்ட நிதி, உணவு நெருக்கடியை தீர்க்கவும் உணவு பாதுகாப்பை உறுதி செய்யவும் பயன்படுத்தப்படும். மேலும் அமெரிக்காவின் தொடர்ச்சியான ஆதரவுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ரயில் சேவைகள்...

நேற்றுமுன்தினமும் (28) நேற்றும் (29) பல ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் நாடு முகங்கொடுத்துள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாடு எதிர்வரும் நாள்களில் நிலைமை மேலும் மோசமடையலாம் என்றார்.

கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்களப்பு, காங்கேசன்துறைக்கு புறப்படவிருந்த ரயில்கள் இரத்து செய்யப்பட்டதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்தது.

ரயில் நிலைய அதிபர்கள் மற்றும் கனிஷ்ட ஊழியர்கள், எரிபொருள் இன்மையால் கடமைக்கு சமுகமளிக்க முடியாமையே இதற்கான காரணம் என்று சங்கம் சுட்டிக்காட்டியது.

கோட்டையில் இருந்து நேற்று (29) காலை 6.35 மணிக்கு மட்டக்களப்புக்கு புறப்பட வேண்டிய 'உதயதேவி' கடுகதி ரயிலும், 6.05 மணிக்கு காங்கேசன்துறைக்கு புறப்பட வேண்டிய 'யாழ்தேவி' ரயிலும் இரத்து செய்யப்பட்டதாக சங்கம் குறிப்பிட்டது.

நேற்றுமுன்தினம் (28) இரவு 9.45 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து பொல்கஹாவெல நோக்கி புறப்படவிருந்த ரயில், கட்டுப்பாட்டாளர்கள் இல்லாத காரணத்தால் இரத்து செய்யப்பட்டிருந்ததுடன், நேற்றையதினம் (28) மேலும் சில ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன.

கொழும்பு கோட்டை உட்பட நாடளாவிய ரீதியிலுள்ள பல ரயில் நிலையங்களில் மக்கள் வெள்ளம் அலை மோதியதுடன், பலர் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

## கதவுகளை உடைத்து...

விசாரணைக்கு வந்த பொலிஸாருடன் ஏற்பட்ட பதற்ற நிலை மோதலாக மாறியதை அடுத்து, நேற்று (29) காலை 8 மணியளவில் புனர்வாழ்வு நிலையத்தின் பிரதான வாயிற்கதவுகள் இரண்டையும் வேலிகளையும் உடைத்துக்கொண்டு 600 கைதிகள் வரை தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் உறுதிப்படுத்தினார்.

சுமார் 1,000 கைதிகள் தங்கியுள்ள இந்த நிலையத்துக்கு பாதுகாப்பு வழங்கும் பணியை இலங்கை இராணுவம் பொறுப்பேற்றுள்ளதாக தெரிவித்த அவர், நிலைமையை கட்டுப்படுத்தவும் தப்பியோடிய கைதிகளை கைது செய்யவும் இராணுவமும் பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கைதியின் மரணம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படும் எனவும், குற்றவாளிகள் கண்டறிப்பட்டால் அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படும் என்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதன்பின்னர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் 232 கைதிகள் சிக்கியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## நல்லிணக்க...

இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளித்தல், அரசியல் மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பிரச்சினைகள் மற்றும் பொதுநலவாயம் உட்பட பலதரப்பு மன்றங்கள் மூலம் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் ஆகிய விடயங்கள் குறித்து அனுபவங்களை அறிந்து கொள்வதில் இலங்கை ஆர்வமாக இருப்பதாக, பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை அடிப்படையாக கொண்டு வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் பொதுநலவாய உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் குழுத் தலைவர்கள் சந்திப்பில் கலந்துரையாடியிருந்தார்.

நாட்டின் சுற்றுலா தொடர்பான அபிவிருத்திகள் குறித்தும், கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் நிலவும் உலகளாவிய நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு சுற்றுலாத் துறையிலான அதிகரித்த பின்னடைவுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்துடன், மருத்துவம், சுற்றுலா, கடல் தொடர்பான பிரச்சினைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் போன்ற பல நம்பிக்கைக்குரிய முயற்சிகள், இலங்கை தொழிலாளர்களுக்கான வேலை வாய்ப்புகள், தூதரக உதவிகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன் சாத்தியமான பகுதிகளை ஆராய்வது குறித்தும் அமைச்சர் பீரிஸ் கலந்துரையாடியுள்ளார்.

## அரசாங்கத்தின்...

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் உயர்மட்ட இராஜதந்திரிகள் குழு நேற்று(29) காலை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகள், நிதி நெருக்கடிகளின் போது அமெரிக்காவின் ஒத்துழைப்பு செயற்பாடுகள், சர்வதேச நாணய நிதியம் தற்போது இலங்கையில் முன்னெடுத்துவரும் மேற்பார்வை மற்றும் ஆய்வு செயற்பாடுகள் குறித்தும் இக்கலந்துரையாடலின் போது முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கத்தின் நிர்வாகத் தவறுகளே காரணமாகவும் ஆரம்பத்தில் முன்னெடுக்கப்பட்ட தவறான தீர்மானங்கள் மற்றும் பொருத்தமில்லாத கொள்கைத்திட்டங்களின் விளைவாகவே நாடு பாரிய பொருளாதாரப் பேரழிவை சந்திக்க நேர்ந்துள்ளது என்பதையும் எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேபோல் சர்வதேச நாணய நிதியத்துடன் முன்கூட்டியே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறும், காலம் தாமதித்தால் நாடு மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிக்குள் விழும் எனவும் எச்சரித்தும் அரசாங்கத்தின் தவறான கொள்கைத்திட்டங்கள், தூரநோக்கற்ற செயற்பாடுகளே நெருக்கடியை உருவாக்கியது எனச் சுட்டிக்காட்டியதாகவும் சந்திப்பில் கலந்துகொண்ட இரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

எவ்வாறாயினும், பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள இலங்கைக்கு மனிதாபிமான ரீதியில் பாரிய அளவில் உதவிகளை பெற்றுக்கொடுத்து வருகின்றமைக்காக அமெரிக்க அரசாங்கத்திற்கு நன்றிகளை தெரிவித்துள்ளனர். இதன்போது, இலங்கையுடன் அமெரிக்கா நீண்ட நட்புறவை கொண்டுள்ளதாகவும், இலங்கையின் நெருக்கடி நிலைமைகளின் போது அமெரிக்கா சகலவிதமான ஒத்துழைப்புகளையும் வழங்கும் எனவும் அமெரிக்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

## நட்பு நாடுகளை...

எரிபொருள், அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்வதில் இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைகள், அடுத்த சில காலத்திற்கு முகங்கொடுக்க வேண்டிய சவால்கள் குறித்து தொடர்ச்சியாக தெளிவுபடுத்தி வருவதாகவும், உலக நாடுகளின் முழுமையான ஒத்துழைப்புகளை இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை எதிர்பார்ப்பதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் உள்ளதாகவும் எனினும் அவர்களின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ள நீண்ட காலம் தேவைப்படும். நட்பு நாடுகளுடன் கடன் மீள் கட்டமைப்பு குறித்தும், உதவிகளை பெற்றுக்கொள்வது குறித்தும் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளை தாம் நன்றாக உணர்வதாக தெரிவித்துள்ள அமெரிக்க தூதுக்குழு, இலங்கையை வளர்ச்சியின் பாதையில் கொண்டுசெல்ல அமெரிக்கா ஒத்துழைப்புகளை பெற்றுக்கொடுக்கும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

முறையான வேலைத்திட்டம் இல்லையேல்

# ஐ.எம்.எப் உதவி கிடைக்காது



முறையான வேலைத்திட்டம் இல்லாது, சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை இலங்கையால் பெற்றுக்கொள்ள முடியாது. எனவே, சர்வதேச நாணய நிதியத்திடம் உண்மைகளைக் கூறி, பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்ட ஒரு நாடு, அதன் கடன் மீள்கட்டமைப்பை முறையான வேலைத்திட்டத்தின் கீழ் முன்வைக்காது போனால், அதை சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக்கொள்ள முடியாது என்றால், ஒருபோதும் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவிகள், இலங்கைக்கு கிடைக்கப்போவதில்லை. சர்வதேச நாணய நிதியம், ஆரம்பத்தில் இலங்கையை நெருக்கடியான நாடாக கருதவில்லை. இலங்கையிடமும் முறையான வேலைத்திட்டம் இருந்தது. ஆனால், இன்று அவ்வாறான நிலையொன்று இல்லை. சர்வதேச மூன்றாம் தரப்பின் உதவிகள், இன்று இலங்கைக்கு தேவைப்பட்டுள்ளன.

இலங்கையின் வரிக்கொள்கை, நாட்டு மக்களுக்கு பாரிய சுமையாக அமைந்துள்ளது. முறையான வரிக் கொள்கைகளை கையாள வேண்டியுள்ளது. இன்று மக்களிடம் பணம் இல்லை; லெபனானை விடவும் மோசமான நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஆகவே இனியும் மக்களை ஏமாற்ற முடியாது.

பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க நாம் உலக நாடுகளுடன் இணைய வேண்டும். அதற்கு இலங்கையின் அடிப்படை கொள்கை மாற்றப்பட வேண்டும். சர்வதேச உடன்படிக்கைகளுக்கு செவி மடுக்க வேண்டும். இறுக்கமான கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும். இவற்றை ஒரு சில நாள்களில் செய்து முடிக்க முடியாது. சர்வதேச நாணய நிதியத்துடன் உண்மைகளைக் கூறி பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும்.

நாட்டை தனியார் மயப்படுத்த இது சரியான நேரம் அல்ல; அவ்வாறு தனியார் மயப்படுத்த வேண்டும் என்றால், அதற்கான சரியான காலம் வரும் வரையில் காத்திருக்க வேண்டும். எனவே, அரசாங்கம் நெருக்கடிகளைச் சமாளிக்க வளங்களை விற்பதோ, தனியார் மயப்படுத்துவதோ எச்சரிக்கையானது என்றார்.



## சீனா வழங்கிய அரிசி நன்கொடை

சீனாவால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 10,000 மெட்ரிக் தொன் அரிசியின் முதலாவது தொகுதி, நேற்று முன்தினம் (28) இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. 44 கொள்கலன்களில் கொண்டுவரப்பட்ட 1,000 மெட்ரிக் தொன் அரிசி, சீனத் தூதரகப் பிரதிநிதிகளால் இலங்கையின் பதில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் கையளிக்கப்பட்டது. சீனாவால் இலங்கை மாணவர்களுக்கு 10, 000 மெட்ரிக் தொன் அரிசி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதுடன், பாடசாலை உணவு திட்டத்துக்கு உதவியளிக்கும் வகையில் 7,900 பாடசாலைகளுக்காக, எதிர்வரும் 6 மாதங்களுக்கு இந்த அரிசி பகிர்ந்தளிக்கப்படுமென சீன தூதுரகம் தெரிவித்துள்ளது.




## பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில்....

2022 ஜூன் 24 முதல் 25 வரை ருவாண்டாவின் கிகாலியில் நடைபெற்ற 2022 பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சார்பில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் கலந்து கொண்டார். ருவாண்டாவின் ஜனாதிபதி பால் ககாமே தலைமையில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில், அரச தலைவர்கள், வெளியுறவு அமைச்சர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுநலவாயத்தின் 54 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## அக்கரைப்பற்று அரிசி ஆலை கத்திக்குத்தில் ஒருவர் படுகாயம்

கனகராசா சரவணன்

அக்கரைப்பற்று-பொத்துவில் வீதியில் அமைந்துள்ள அரிசி ஆலையில் ஆண்ணொருவர் மீது செவ்வாய்க்கிழமை (28) இரவு இனந்தெரியாத நபரொருவர் கத்தியால் குத்தியுள்ளார்.

சம்பவத்தில், படுகாயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதுடன் கத்திகுத்து தாக்குதலை மேற்கொண்டவர் என்ற குற்றச்சாட்டின் கீழ், ஒருவரை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர். மதுபோதையில் இருந்த இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம், கத்திக்குத்தில் முடிந்துள்ளது.



## மலேசிய உயர்ஸ்தானிகர் நீதி அமைச்சரை சந்தித்தார்

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் டான் யாங் தாய் உடனான சந்திப்பு நேற்று (29) இடம்பெற்றிருந்தது. குறிப்பாக, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் இராஜதந்திர உறவுகள், இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலி

நாட்டின் பல பாகங்களிலும் அண்மைய நாள்களில் துப்பாக்கிச் சூட்டுப் பிரயோக சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. அதில் பலர் மரணமடைந்துள்ளனர். இன்னும் சிலர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மொரட்டுவை, கட்டுபெத்த சந்தியில் நேற்று (29) மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் பலியாகியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

## அநுரவின் 6 மாதத்துக்கு நாம் ஒத்துழைக்கிறோம்



ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவால் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க முடியுமாக இருந்தால், அவருக்குத் தேவையான முழுமையான ஒத்துழைப்பை வழங்க நாம் தயார் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் என நாம் தெரிவித்த யோசனைக்கு, நாட்டு மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை பெற்றுக் கொள்வது தொடர்பான கலந்துரையாடலுக்கு, உயர்மட்ட தூது குழு அங்கு செல்ல வேண்டும். எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவும் இதில் கலந்துகொள்ள செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தை தம்மிடம் ஒப்படைத்தால் நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து வெறும் ஆறு மாதங்களிலேயே தன்னால் மீட்டெடுக்க முடியும் என அநுரகுமார திஸாநாயக்க கூறி இருக்கிறார். அவருக்கு அதனை செய்வதற்கான பலமும் சக்தியும் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கிறேன். அவருக்கு தேவையான ஒத்துழைப்புகளை நாம் முழுமையாக வழங்குவோம் எனவும் இதன்போது கூறினார்.

இலங்கையர்கள் அனுபவிக்கும்

## இன்னல்களைப் பார்க்க கவலை அளிக்கின்றது



இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியால் ஒவ்வொரு நாளும் சாதாரண இலங்கையர்கள் அனுபவிக்கும் இன்னல்களைப் பார்ப்பது கவலையளிக்கின்றது. கனடா, இலங்கையின் மீளிணக்கச் செயன்முறைக்கு ஆதரவளிப்பதுடன் பெண்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட சன சமூகங்களாகிய யாருடைய ஒருங்கிணைப்பு நாட்டின் வெற்றிக்கு அவசியமானதோ அவர்களின் வலுவூட்டலுக்கும் ஆதரவளிக்கின்றது என இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினொன் விடுத்துள்ள கனேடிய தின செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கையில் புறத்தாக்கங்களால் பொருளாதார நெருக்கடி அதிகரித்துள்ளது. அதன் விளைவாக, ஒவ்வொரு நாளும் சாதாரண இலங்கையர்கள் அனுபவிக்கும் இன்னல்களைப் பார்ப்பது கவலையாகவுள்ளது. பெருந்தொற்றின் போதும் கடந்த 70 ஆண்டுகளாகவும் நாம் செய்ததைப் போன்றே இந்த நெருக்கடி நேரத்திலும் கனேடியர்கள் தனது ஆதரவை வழங்கியுள்ளனர். உலக சுகாதார ஸ்தாபனத்துடன் இணைந்து, அத்தியாவசிய மருந்துகள், பொருட்கள் ஆகியவற்றின் கொள்வனவுக்கான நிதியை நாம் வழங்குகின்றோம். பாடசாலை உணவு நிகழ்ச்சிக்கு உடனடியாகத் தேவையாகவுள்ள அரிசியை கொள்வனவு செய்வதற்கு உலக உணவுத் திட்டத்துடனும் கனடா பணியாற்றுகின்றது.

இந்தச் சவால்மிக்க நேரங்களை மிகவும் நிலையான வளமான அத்துடன் இந்தக் குறிப்பிடத்தக்க நாட்டினதும் அதன் ஆற்றலுடைய மக்களினதும் பெரும் இயலுமையை முன்னெடுத்துச் செல்லக்கூடிய, அனைத்துமடங்கிய சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு சந்தர்ப்பமாக்குவதற்கான பல இலங்கையர்களின் விசேட ஆர்வத்தை பாராட்டுகின்றேன்.

பல்வேறுபட்ட நிலைமைகளின் பொழுதும் கூட, கனடாவில் நாம் கூட இது தொடர்பான ஒரு சட்டவாக்கத்தை அங்கிகரித்து, முடிவுக்குக் கொண்டுவருதல் உட்பட சுதேசிய மக்களுடனான மீளிணக்கத்தை முன்கொண்டு செல்வதால், எல்லோருக்குமான ஒரு சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாமும் உழைக்கின்றோம்.

உலகம் முழுதிலும் இருந்து ஆயிரக்கணக்கான புலம்பெயர்வாளர்களைத் தொடர்ந்து வரவேற்றுக்கொண்டிருந்த பொழுதிலும், எமது அழகான நாட்டின் பூர்வீககுடிகளின் வழித்தோன்றல்களை ஏற்றுக்கொண்டு, கனேடிய சமூகத்தில் முழுமையாகக் கொண்டாடுவதை நிச்சயப்படுத்த நாம் விரும்புகின்றோம்.

இதனோடு தொடர்புட்ட வகையில் கனடா, இலங்கையின் மீளிணக்கச் செயன்முறைக்கு ஆதரவளிப்பதுடன் பெண்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட சன சமூகங்களாகிய யாருடைய ஒருங்கிணைப்பு நாட்டின் வெற்றிக்கு அவசியமானதோ, அவர்களின் வலுவூட்டலுக்கும் ஆதரவளிக்கின்றது. இது மக்களிடையிலான பலமான இணைப்பையும் நீண்ட பொருளாதாரப் பிணைப்பையும் கட்டியெழுப்புகின்றது.

பல்வகைத் தன்மை, ஐக்கியம் என்பவற்றுக்கான ஒரு தினமாக, நாம் கனடா நாளைக் கொண்டாடுகின்றோம். இன்னும் அனைவரையும் உள்ளடக்கிய ஓர் எதிர்காலத்திற்காக நாம் நம்பியிருப்போமாக!கனடா தின வாழ்த்துகள் என அவர் அச் செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெளிநாடுகளுக்கு

## விற்பனை செய்வதே அரசாங்கத்தின் நோக்கம்



எரிபொருள் நெருக்கடி நிலைமை ஒன்றை தோற்றுவித்து, அதன்மூலம் நாட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதே அரசாங்கத்தின் நோக்கம் என பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

நாட்டில் திட்டமிடப்பட்டவாறே எரிபொருள் நெருக்கடி நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு ரஷ்யாவிடம் இருந்து கடன் அடிப்படையில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள நாம் அரசாங்கத்திற்கு யோசனை ஒன்றை முன்வைத்திருந்த போதிலும், அது தொடர்பில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எரிபொருளை பெற்றுக்கொள்வது தொடர்பில் கலந்துரையாட ரஷ்யாவிற்கு இரு அமைச்சர்கள் செல்வதாக அரசாங்கம் கூறினாலும், இதுவரையில் எவரும் செல்லவில்லை எனவும் தெரிவித்தார்.

முஸ்லிம் சமூகத்துக்கு இழைத்த கொடுமைகளை

## இஸ்லாமிய நாடுகள் மறக்காது

பா.நிரோஸ்



தற்போதைய அரசாங்கம் முஸ்லிம் சமூகத்துக்கு செய்தவற்றை இஸ்லாமிய நாடுகள் ஒருபோதும் மறக்காது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்தார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார். கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்வதற்குப் பதிலாக, இறந்தவர்கள் முஸ்லிம்கள் என்பதால், அரசாங்கம் அந்த ஜனாஸாக்களை எரித்தது. அதேபோல், வைத்தியர் ஷாபி, முஸ்லிம் என்பதால் அவர் மீது போலியான குற்றச்சாட்டுகளை சுமத்தியது.

முஸ்லிம்களுக்கு எதிராக நாட்டில் இவற்றையெல்லாம் செய்த அரசாங்கம், இன்று அதே இஸ்லாமிய நாடுகளிடம் உதவிகளுக்காக கையேந்தி நிற்கிறது. எவ்வாறாயினும் இலங்கையில் வாழும் முஸ்லிம்களுக்கு செய்த கொடுமைகளை இஸ்லாமிய நாடுகள் ஒருபோதும் மறக்காது எனவும் தெரிவித்தார்.

கடற்படையினருக்கான

# காணி சுவீகரிப்பு; தடுத்து நிறுத்தம்

எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம், காரைநகரில் கடற்படை முகாம் அமைப்பதற்காக பொதுமக்களின் காணியை சுவீகரிக்கும் முயற்சி, மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

காரைநகர் J/145 கிராம சேவையாளர் பிரிவில் நீலன்காடு பகுதியில் தனியாருக்கு சொந்தமான காணியை கடற்படை முகாம் அமைக்கவென அளவீடு செய்யும் முயற்சி நேற்றும் (29) முன்னெடுக்கப்பட இருந்தது.

அதனையடுத்து அங்கு கூடிய மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோரின் எதிர்ப்பால் காணி அளவீட்டு பணிகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன.

# சிவப்பை மீறியோருக்கு வழக்கு தாக்கல்

எம்.எஸ்.எம். ஹனீபா



அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்து துப்புரவு செய்யுமாறு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தும், அதனை மீறியபவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக, அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் எப்.எம்.ஏ. காதர் நேற்று (29) தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், இராணுவத்தினர், விசேட டெங்கொழிப்பு செயலணியினர் இணைந்து, வீடு வீடாகச் சென்று டெங்கொழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, டெங்கொழிப்பு தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

டெங்கொழிப்பு பரிசோதனையின் போது, டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்து துப்புரவு செய்யுமாறு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தும், அதனை மீறியவர்களுக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுற்றுப்புறத்தில் தேங்கும் நீர் நிலைகளைக் கண்டறிந்து, அவற்றை வெறுமைப்படுத்துதல் அல்லது நீர் தேங்கி உள்ள அத்தகைய இடங்களில் பூச்சிகொல்லி மருந்துகளைத் தெளித்தல், உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளை இடல் போன்றன நுளம்புகளின் பெருக்கத்தைத் தடுக்கின்றன.

பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட்டு வீடுகளில் தேங்கியுள்ள குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி, டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு இடம் கொடுக்காத வகையில், துப்புரவாக தமது இடங்களை வைத்து கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

தென்னம் குரும்பை, யோகட் கப், வெற்று போத்தல்கள், வெற்று டயர்கள், பொலிதீன் கழிவுகள் போன்ற கழிவுகளை முறையாக அகற்ற வேண்டும்.வாரத்தில் ஒரு நாள், மக்கள் தங்களது வீடுகளையும் சுற்றுப்புறச் சூழலையும் துப்புரவு செய்ய வேண்டும். டெங்கொழிப்பு ஆலோசனைகள் தேவைப்படும் பட்சத்தில் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாமென அறிவித்துள்ளார்.

# மக்களுக்கு அறிவுறுத்தல்




சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்கள் எரிபொருளைப் பெறுவது தொடர்பிலான அறிவித்தலை பிரதேச செயலாளர் விடுத்துள்ளார்.

எரிபொருள் அட்டை பெற்றுக் கொள்வதற்காக கொண்டு செல்ல வேண்டிய ஆவணங்கள்:

01. குடும்ப அட்டை
02. வாகனப் புத்தகம்
03. இவ்வருட வாகன வரி அனுமதிப் பத்திரம் (Tax)
04. இவ்வருடத்துக்கான வாகனக் காப்புறுதி அனுமதிப் பத்திரம் (Insurance)
05. தேசிய அடையாள அட்டை

எரிபொருள் அட்டை வழங்கப்படுவதற்கான நிபந்தனைகள்:

01. வாகனம் பாவனையில் இருத்தல் வேண்டும்.
02. ஒரு வாகனத்துக்கு ஓர் அட்டை மட்டும் வழங்கப்படும்.
03. வாகன உரிமையாளர் பெயரில் மட்டும் அட்டை வழங்கப்படும்.
04. பெயர் மாற்றங்களை செய்யவேண்டுமாயின் உடன் செய்து கொள்ளவும்.
05. முல்லை மாவட்டத்துக்கு உட்பட்ட அரசாங்க நிறுவனங்கள் , கூட்டுதாபனங்கள், திணைக்களங்கள், தனியார் வங்கிகள் ஆகியவற்றில் கடமையாற்றுபவர்களுக்கு, நிறுவனங்களால் எரிபொருள் அட்டை வழங்கப்படும்.
06. மேற்குறிப்பிட்ட பகுதியினர் தவிர்ந்த அனைத்து பொது மக்களுக்கும், கிராம அலுவலர் பிரிவுகள் ஊடாக வழங்கப்படும்.
07. உரிய நபர் நேரில் வருகை தர வேண்டும்.
08. எரிபொருள் அட்டை தொலைந்தால் மீண்டும் வழங்கப்பட மாட்டாது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இதே நிபந்தனைகளுடன் எரிபொருளை பெறுவதற்கான பங்கீட்டு அட்டை வழங்கும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வீட்டுத் தோட்ட பயிர் செய்கைக்கு ஊக்குவிப்பு

நடராசா கிருஸ்ணகுமார்



கிளிநொச்சி மாவட்டத்தில் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விவசாயத் திணைக்களம் ஊடாக வீட்டுத் தோட்டத்துக்கான விதைகள் அதிகாரிகளால் வழங்கப்படுகின்றன.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை நிலையங்களில் தற்போது உள்ள இரசாயன உரங்களை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கிளிநொச்சி மாவட்டச் செயலாளரிடம் விவசாயிகளால் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் மேட்டுப் பயிர்ச் செய்கை திட்டங்களான கனகாம்பிகைக்குளம், பிரமந்தனாறு, கண்ணகைபுரம் ஆகிய பகுதிகளில் விவசாயிகள் கூடுதலாக உற்பத்தியில் ஈடுபட வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வருகின்றனர்.

# படகுகள் தயார் நிலையில் உள்ளன



நடராசா கிருஸ்ணகுமார்

இந்தியாவிலிருந்து பொருட்களை கொண்டு வருவதற்கான இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருவதாகவும், பொருட்களை ஏற்றி வருவதற்கான படகுகள் தயார் நிலையில் இருப்பதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு, நான் கூறிவருவது போன்று இந்தியாவிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதன் ஊடாக, வடக்கு மாகாணம் அதற்கு மேலாக வடமத்திய மாகாணம் நன்மையை பெறும். அது விரைவில் நடைபெறுமென நம்பிக்கை வெளியிட்டார்.

“இந்தியாவிலிருந்து பொருட்களை ஏற்றி வருவது தொடர்பில் அமைச்சரவையில் எவ்விதமான தடையும் இல்லை. கடைசியாக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

ஆனால், நாணய மாற்று விடயத்தில் மாத்திரமே சில நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவை நிறைவடைந்ததும் எமது மக்களுக்கு தேவையான பொருட்களை ஏற்றிய படகு, இந்தியாவில் இருந்து காங்கேசன்துறையை நோக்கிப் புறப்படும்” என்று தெரிவித்தார்.

# உலருணவு பொதிகள் வழங்கி வைப்பு

ஹஸ்பர்





திருகோணமலை மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மனையாவெளி பகுதியில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த உலருணவு பொருட்களை திருகோணமலை புளூ வோட்டர் கழகம் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஆ.ஜெயசீலன் தலைமையில் நேற்று முன்தினம் (28) வழங்கி வைக்கப்பட்டது.

அரிசி, சீனி, மா போன்ற அத்தியவசியப் பொருட்கள் அடங்கிய தலா 3,000 ரூபாய் பெறுமதியான உலருணவு பொதிகள், 40 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக பாதிக்கப்பட்ட தினக்கூலி தொழிலாளர்களுக்கு இப்பொதிகள் வழங்கப்பட்டன.

ஆலையடிவேம்பில்

# ஏக்கருக்கு 15 லீற்றர் டீசல்

விசுகிர்தகுமார்



எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பெரும்போக விவசாய செய்கை அறுவடையினை பாதுகாப்புடன் மேற்கொள்வது தொடர்பிலான தீர்மானம் மேற்கொள்ளும் கூட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் (28) நடைபெற்றது.

பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில், அக்கரைப்பற்று கிழக்கு விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர், இராணுவ அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது தலைமை உரையாற்றிய பிரதேச செயலாளர் வி.பபாகரன், ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் 8,500 ஏக்கர் வயல் நிலப்பரப்பில் விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் அறுவடையும் ஆரம்பமாகவுள்ளது.

ஆகவே, விவசாய அறுவடைக்கு தேவையான எரிபொருள் தொடர்பில் கவனம் செலுத்துவது மிக முக்கியமானது. இதனை கருத்தில் கொண்டு, மாவட்ட செயலாளரிடம் தேவையான எரிபொருளை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளேன். அவரும் வழங்குவதாக உறுதி அளித்துள்ளார்.

> **“ எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக குறைவாகவோ அல்லது எரிபொருள் கிடைக்காமல் போனாலோ என்ன செய்வது என்பதுதான் இங்குள்ள கேள்வி**

அதற்காக முயற்சியை பிரதேச செயலாளர் எனும் அடிப்படையில் முழுமையாக எடுத்துள்ளேன். அவ்வாறு கிடைத்தால் யாருக்கும் பிரச்சினை இல்லை. ஆனாலும், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக குறைவாகவோ அல்லது எரிபொருள் கிடைக்காமல் போனாலோ என்ன செய்வது என்பதுதான் இங்குள்ள கேள்வி என்றார்.

இதற்கான தீர்வு காணப்படவேண்டும். எனில் விவசாய பிரதிநிதிகளின் ஒத்துழைப்பு அவசியம். இதன் பின்னராக பலரது ஆலோசனைக்கு மத்தியில், கிடைக்கும் எரிபொருளில் அருகில் உள்ள பிரதேசங்களுக்கு ஏக்கருக்கு 12 லீற்றர் டீசலும் தூரப்பிரதேசங்களுக்கு ஏக்கருக்கு 12 லீற்றருடன் மேலதிகமாக 2 லீற்றர் விநியோகிப்பதற்கும் உடன்பாடு எட்டப்பட்டது.

அத்தோடு, ஒகஸ்ட் 10ஆம் திகதி வரை அறுவடை நடைபெறும் எனவும் இக்காலத்தில் கட்டம் கட்டமாக டீசல் டோக்கன் அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# எரிபொருள் விநியோகம் முன்னெடுப்பு



எம்.எஸ்.எம்.நூர்தீன்



மட்டக்களப்பு நகரில் உள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் செவ்வாய்க்கிழமை (28) எரிபொருள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் வழங்கப்பட்ட நிலையில், அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் எரிபொருள் நிலையத்திற்குள் குவிந்த காரணத்தால் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதன்போது பெற்றோல் விநியோக நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு, குறித்த இடத்திற்கு வருகை தந்த மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்க, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன், குறித்த எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் எம்.செல்வராசா ஆகியோர் மேற்கொண்ட கலந்துரையாடலை அடுத்து, விசேட ஒழுங்குபடுத்தலின் கீழ் எரிபொருள் விநியோக நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கும், பொதுமக்களுக்குமாக 6,600 லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் தீர்வை அரசிடம் கோரவும்

## ஜப்பானிடம் மணிவண்ணன் வலியுறுத்து

நிதர்சன் வினோத், டி.விஜித்தா



யாழ். மாநகர மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் மற்றும் ஜப்பானிய தூதுவருக்கு இடையிலான சந்திப்பு, யாழ். மாநகர சபையில் நேற்று (29) இடம்பெற்றது.

ஜப்பான் கடந்த காலங்களில் யாழ். மாநகர சபையின் எல்லைக்குள் செய்துவந்த பொருளாதார மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கு இச்சந்திப்பின் போது நன்றி தெரிவிக்கப்பட்டது.

தற்சமயமும் இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றுக்கு ஜப்பானிய அரசு பங்களிப்பு செய்ய வேண்டும் என்றும், இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி முன் நிபந்தனையாக இலங்கையில் ஒரு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை அரசுக்கு ஜப்பானிய அரசு விடுக்க வேண்டும் என்றும் மாநகர மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஜப்பானிய தூதுவரிடம் கேட்டுக்கொண்டார்.

# கொடியேற்றம்

சண்முகம் தவசீலன்

ஈழத்தின் புராதன சிவ ஆலயங்களில் ஒன்றான ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய மஹோற்சவம் 28ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து ஆலயத்தின் சிறப்பு உற்சவங்களாக, ஜூலை 10 வேட்டைத் திருவிழாவும், 11 ஆம் திகதி சப்பற திருவிழாவும் 12 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 13 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.



நாட்டின் நிலைமையானது

# 2 கோடுகளால் மாறிப்போனது

## இராதா எம்.பி தெரிவிப்பு

டி.ஷங்கீதன்


இரண்டு கோடுகளை 69 இலட்சம் மக்கள் தவறாக பயன்படுத்தியதால் இலங்கையின் அனைத்து மக்களும் இன்றைய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஸ்ணன், எனவே கோடுகள் தானே என்று இனிமேலும் அலட்சியமாக செயற்படக் கூடாது என்றார்.

நாட்டின் இன்றைய நிலைமை தொடர்பாக அவர் நேற்று கருத்து தெரிவிக்கின்ற போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எந்த ஒரு விடயத்தையும் அலட்சியமாகப் பார்க்கவோ செயற்படவோ கூடாது. அப்படி செயற்பட்டதால்தான் இன்றைய நிலைமைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது. வாக்களித்தவர்கள் மாத்திரம் அல்ல, அனைவருமே இன்றைய நிலைமைக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

எரிபொருளைக் கொண்டு வருவதற்கு எந்தவிதமான திட்டத்தையும் முயற்சி செய்யாமல் இன்று கட்டாருக்கும் ரஷ்யாவுக்கும் ஒடிக் கொண்டிருக்கின்றார்கள்.

எனவே, எந்தவிதமான திட்டமிடலும் இல்லாமல் இந்த நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது. தொடர்ந்தும் இந்த அரசாங்கம் வெளிநாடுகளில் கடன் பெறுவதை மாத்திரமே இலக்காக கொண்டு செயற்படுகின்றது.



எவ்வளவு காலத்திற்கு கடன் வாங்கி நாட்டை கொண்டு செல்ல முடியும். எனவே, நாட்டிற்குள் எங்களுடைய வளங்களை பயன்படுத்தி டொலர் கொண்டு வருவதற்கான திட்டங்களை ஏற்படுத்த வேண்டும். அதனை விடுத்து தொடர்ந்தும் ஏனைய நாடுகளிடம் கையேந்திக்கொண்டு, இந்த நாட்டை எவ்வளவு காலத்திற்கு முன் கொண்டு செல்ல முடியும் என கேள்வி எழுப்பினார்.

நாட்டில் நட்டத்தில் இயங்கும் அனைத்து துறைகளையும் சரியான திட்டமிடலுடன் தனியாருக்கு வழங்கி, நட்டமீட்டுகின்ற துறைகளை இலாபமீட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நாம் என்றுமே அபிவிருத்தியை நோக்கி முன் செல்ல முடியாது என்றார்.







## திறந்து வைப்பு

அக்கரப்பத்தனை, பெல்மோரல் தோட்ட கிளைஸ்டல் பிரிவில், 80 இலட்சம் ரூபாய் பெறுமதியான சிறுவர் பராமரிப்பு நிலையம் நேற்று (29) திறந்து வைக்கப்பட்டது. (நீலமேகம் பிரசாந்த்)

கர்ப்பிணிகளுக்கான

# எச்.ஐ.வி பரிசோதனையில் சிக்கல்

சேஹ்ன் செனவிரத்ன

பெண்கள் கர்ப்பமடையும் முதலாவது சந்தர்ப்பத்தில் எச்.ஐ.வி, வி.டி.ஆர்.எல் போன்ற பரிசோதனைகள் கட்டாயமாக செய்யப்பட வேண்டிய நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள மருத்துவ உபகரணங்களுக்கான தட்டுப்பாடு, மருந்து தட்டுப்பாடு காரணமாக குறித்த பரிசோதனைகளை முன்னெடுப்பதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக தாயிடமிருந்து சேய்க்கு தொற்றும் சில நோய்களை தடுக்கும் சில வேலைத்திட்டங்கள் தற்போது முழுமையாக செயலிழந்துள்ளன என இலங்கை வைத்தியர் சங்கத்தின் பிரதி தலைவரும் ஊடகப் பேச்சாளருமான வைத்தியர் சிதான் ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பெண்கள் பாலியல் தொழில்களில் ஈடுபடுவது அதிகரித்துள்ளதாகவும் இதனால் குறித்த எச்.ஐ.வி பரிசோதனையானது, கர்ப்பிணிகளுக்கு மாத்திரமல்லாது எச்.ஐ.வி தொற்று ஏற்படும் என சந்தேகிக்கப்படும் அனைவரும் கட்டாயம் செய்ய வேண்டிய பரிசோதனையாகும்.

குறித்த பரிசோதனையானது, கருவுற்றதிலிருந்து 14 வாரங்கள் செல்வதற்கிடையில் செய்யப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே தற்போதைய டொலர் பிரச்சினையால் இந்தப் பரிசோதனையை முன்னெடுப்பதற்கான வாய்ப்பு குறைந்துள்ளதாகவம் இதனால் பிறக்கும் குழந்தை எச்.ஐ.வி தொற்றுடன் பிறந்தால் அதற்காக பாரிய நிதியை செலவிட நேரிடும் என்றும் எச்சரித்துள்ளார்.

எச்.ஐ.வி தொற்றானது தாயிடமிருந்து சிசுவுக்கு தொற்றுவதை முற்றாக ஒழிக்கும் நாடாக இலங்கை 2018ஆம் ஆண்டு உலக சுகாதார ஸ்தாபனத்தினால் பெயரிடப்பட்டுள்ளது.

அதேபோல் 2025ஆம் ஆண்டளவில் எச்.ஐ.வி தொற்றை முற்றாக ஒழித்த நாடாக இலங்கையை மாற்றும் இலக்கானது, நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாடால் இல்லாமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றார்.

ரயில் ஆசன பதிவு மோசடியால்

# வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மூவர் அவதி

டி.ஷங்கீதன்

ஜேர்மனியிலிருந்து இந்த மாதம் 17ஆம் திகதி சுற்றுலாப் பயணம் மேற்கொண்டு, இலங்கைக்கு வந்த மூவர், கொழும்பில் இருந்து எல்ல பகுதிக்குச் சென்று, மீண்டும் அங்கிருந்து கண்டி செல்வதற்காக முகவர் ஒருவர் ஊடாக ரயில் டிக்கெட்டுகளை பதிவு செய்திருந்தனர்.

குறித்த இரயில் டிக்கெட்டுகளை பதிவு செய்து கொடுத்த தனியார் நிறுவனமானது, ஜேர்மனிய பிரஜைகள் மூவரிடமும் கட்டணமாக 35 டொலர் அறவிட்டதாக ஜெர்மனியை பிரஜைகள் தெரிவிக்கின்றனர்.

எனினும் குறித்த தனியார் நிறுவனம், கண்டிக்கு பதிவு செய்ய வேண்டிய ரயில் டிக்கெட்டை நானுஓயாவுக்கு மாத்திரமே பதிவு செய்து கொடுத்துள்ளது.

அதைச் சரியாக அவதானிக்காத ஜேர்மனி பிரஜைகள் மூவரும், தங்களுக்கு கண்டிக்கான டிக்கெட் இருப்பதாக நினைத்து, 27ஆம் திகதி முதலாம் வகுப்பில் கண்டிக்கான தங்களுடைய பயணத்தை தொடர்ந்துள்ளனர்.

ரயிலில் டிக்கெட் பரிசோதகர்களால்



இவர்களுடைய டிக்கெட்டுகளை பரிசோதனை செய்த போது, இவர்களுக்கு நானுஓயா வரை மாத்திரமே டிக்கெட் இருப்பதாக ஜேர்மனியை பிரஜைகளிடம் தெரிவித்துள்ளனர்.

இதனால் அதிர்ச்சிக்குள்ளாகிய அவர்கள், தங்களுக்கு கண்டி வரை பயணிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்குமாறும் தாங்கள் மேலதிக பணத்தை கண்டி ரயில் நிலையத்தில் செலுத்துவதாகவும் தெரிவித்து, தாம் மோசடிக்கு உள்ளாகியுள்ள தகவலை தெரிவித்துள்ளனர். இதனையடுத்து இரண்டாம் வகுப்பில் கண்டி வரை பயணிக்க அனுமதி வழங்கப்பட்டது. ஜேர்மனிய பிரஜைகளுக்கு ஆசனங்களை ஒதுக்கிய நிறுவனத்துடன், ரயில்வே அதிகாரிகள் தொடர்பு கொள்ள முயற்சி செய்த போதிலும் அது முடியாமல் போயுள்ளது.



எரிபொருள் நிலையங்களுக்கு பூட்டு

# வரிசைகள் குறையவில்லை

மலைவாஞ்ஞன்

மலையகத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லாததன் காரணமாக, அவை மூடப்பட்டிருந்த போதிலும் வாகன சாரதிகள், தொடர்ந்தும் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்கின்றனர். எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நேற்று (29) மலையகத்தில் பொது போக்குவரத்தும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெற்றன.

> **பஸ் போக்குவரத்து குறைவடைந்த நிலையில் அதிகமான மக்கள், ரயில்களில் பயணிக்க தொடங்கியுள்ளதுடன் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், தபால் சேவைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன**

இதனால் நேற்று காலை, பாடசாலை ஆசிரியர்கள், அரச மற்றும் தனியார் ஊழியர்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்தனர். பஸ் போக்குவரத்து குறைவடைந்த நிலையில் அதிகமான மக்கள், ரயில்களில் பயணிக்க தொடங்கியுள்ளனர் என ரயில் நிலைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட நிர்வாகங்கள் தெரிவிக்கின்றன. மேலும், நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டினை தொடர்ந்து, தபால் சேவைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் நேற்று (29) மலையகத்தில் உள்ள பல தபால் நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

“டோக்கனுக்கு எரிபொருள் தா”

# பதுளையில் ஆர்ப்பாட்டம்

பாலித ஆரியவன்ஸ

எரிபொருள் விநியோகிப்பதற்காக டோக்கன் வழங்கப்பட்டாலும் தமக்கு இதுவரை எரிபொருள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து, நேற்று (29) பதுளை எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பதுளையில் அமைக்கப்பட்டுள்ள ‘கோட்டா கோ கம’ போராட்டக்காரர்களும்




இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்துகொண்டனர்.

எனினும், பொலிஸார் தலையிட்டு நிலைமையை தெளிவுப்படுத்தியதன் பின்னர், எரிபொருள் பெற்றுக்கொள்ள வந்தவர்கள் கலைந்து சென்றனர்.

சிறுத்தைகளின் அதிகரித்த நடமாட்டம்:

# அச்சத்தில் கிரிவன்எலிய கிராம மக்கள்

ரஞ்சித் ராஜபக்ஷ

நோர்ட்டன் பிரிட்ஜ், ஏழு கன்னியர் மலைத்தொடரை அண்மித்த காட்டில் உள்ள சிறுத்தைகள், இரவில் கிராமத்துக்கு வருவதால் கிரிவன்எலிய கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அச்சத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

குறித்த கிரிவன்எலிய கிராமத்தில் உள்ள வளர்ப்பு நாய்கள் பல காணாமல் போவதாகவும் இரவில் கிராமத்துக்கு வரும் சிறுத்தைகளே நாய்களை வேட்டையாடிச் செல்வதாகவும் கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய குறித்த கிராமத்தில் வீடொன்றில் வளர்க்கப்படும் இரண்டு நாய்களை நேற்று முன்தினம் (28) இரவு பத்து மணியளவில், வேட்டையாட முயலும் காட்சியானது, அங்கு பொருத்தப்பட்டுள்ள



பாதுகாப்பு கமெராவில் பதிவாகியுள்ளது.

குறித்த வீட்டைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு உள்ளதால், நாய்கள் காப்பாற்றப்பட்டு உள்ளதாகவும் வீட்டின் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இரவில் கிராமத்தை நோக்கி வரும் சிறுத்தைகளை, காட்டுக்குள் துரத்தும் நடவடிக்கைகளை வனஜீவராசிகள் பாதுகாப்பு அதிகாரிகள் எடுக்க வேண்டும் என, கிரிவன்எலிய கிராமவாசிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பத்திரிகைகள் விநியோகம்:

# மலையகத்தில் முடங்கின

ரஞ்சித் ராஜபக்ஷ

அரச மற்றும் தனியார் பத்திரிகை நிறுவனங்களால் தலைநகரிலிருந்து அச்சிட்டு வெளியிடப்படும் தினசரி பத்திரிகைகள் விநியோகமானது, நுவரெலியா மாவட்டத்தில் நேற்று (29) முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மாவட்டங்களிலுள்ள பத்திரிகை விற்பனை முகவர் நிலையங்களுக்கு நேற்று (29) தலைநகரிலிருந்து எவ்வித பத்திரிகைகளும் விநியோகிக்கப்படவில்லை என்றும் முகவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில், பத்திரிகை விற்பனை முகவர்களிடம் விசாரித்த போது, எரிபொருள் பிரச்சினை காரணமாகவே, பத்திரிகைகள் விநியோகிக்கப்படவில்லை. தற்காலிகமாக விநியோகம் இடைநிறுத்தப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தனர்.



# குளத்தில் விழுந்த குழந்தை உயிரிழந்தது

பன்வில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கலாபொக்க மேற்பிரிவில் 3 வயது ஆண் குழந்தை நேற்றுமுன்தினம் (28) மாலை குளத்தில் விழுந்து உயிரிழந்துள்ளது.

தனது வீட்டுக்கு முன்பாக மீன்கள் வளர்ப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள குளத்தில், வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த போதே, குளத்தில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாகவும் சடலம் மடுல்கல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மடுல்கல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தோட்ட லயக் குடியிருப்பில் தீ பரவல்

# இரண்டு வீடுகள் சேதம்

வெலிமட, ஊவாதென்ட தோட்டத்தின் 5ஆம் இலக்க லயக் குடியிருப்பில் நேற்று முன்தினம் (28) இரவு தீ பரவல் ஏற்பட்டது. இதன்போது 2 வீடுகள் தீயில் எரிந்து சேதமாகியதாக வெலிமட பொலிஸார் தெரிவித்தனர்.

தீ பரவலையடுத்து வெலிமட பொலிஸாரும் பிரதேசவாசிகளும் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

தீ பரவலுக்கான காரணம் தெரியவரவில்லை என தெரிவித்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# இனவாதத்தை கக்குவோருக்கு இடமில்லை என்பது புலனாகிறது

பல்லினங்கள் வாழும் நாட்டில், இனங்களுக்கு இடையில் பிரிவினை நஞ்சை விதைத்து, தங்களுடைய அற்ப ஆசைகளை நிறைவேற்றிக்கொள்வதில் அரசியல்வாதிகள் கைதேர்ந்தவர்கள் என்பதற்கு, நமது நாடு மட்டுமே நல்லதோர் உதாரணமாகும்.

இனவாதம், மதவாதம், பிரிவினைவாதம் யாவும் தேர்தல் பிரசாரக் காலங்களில் சூடுபிடித்திருக்கும். இனம், மொழி, மதம் ரீதியில் பிரிக்கப்படும் வாக்காளர்கள், தூரநோக்கு சிந்தனைகளின்றி வாக்களிப்பர். அதில், பிரிவினைவாதங்களை கக்குவோரே வெற்றிப்பெறுவர்.

கடந்த காலத் தேர்தல்களின் கசப்பான பெறுபேறுகளால், மக்கள் இன்னமும் நடுவீதிகளில் நின்று கொண்டிருக்கின்றனர். வரிசையை குறைப்பதற்கு விடைதேடாது, அந்த வரிசைகளுக்குள் புகுந்து, இனவாதத்தை கக்க முயன்ற முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர, துரத்தியடிக்கப்பட்டார். ஆக, இனிமேலும் இனவாதம் எடுபடாது என்பதற்கு, ஆரம்பப்புள்ளி இடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, குருந்தூர் மலையில் புத்தர் சிலையை வைக்கும் முயற்சி தடுக்கப்பட்டமையை இனவாத கண்ணோடு பார்த்த சரத் வீரசேகர, பௌத்த-சிங்கள மக்களின் இரத்தத்தைச் சூடேற்றும் வகையில் உரையாற்றியிருந்தார். அப்படியான அவரையே, 'ஹூ' சத்தமெழுப்பி கேலி, கிண்டல் செய்து மக்கள் துரத்தியடித்துள்ளனர்.

அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பவும் ஜனாதிபதியை வீட்டுக்குச் செல்லுமாறும் வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் 'கோட்டா கோ கம'வை, இனவாதக் கண்கொண்டு பார்த்தவர்கள், "வெளிநாடுகளில் வாழும் புலிகளே, அதன் பின்னணியில் செயற்படுகின்றனர்" என்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தனர்.

எனினும், இளைஞர், யுவதிகளாகிய தாங்கள் அனைவரும் எவ்விதமான பிரிவினைகளும் இன்றி, ஓரணியில் திரண்டு நிற்கின்றோம் என்பதை, 'கோட்டா கோ கம' போராட்டக்காரர்கள் எடுத்து காட்டியுள்ளனர். பிரச்சினைகளின் முக்கியத்துவத்தை பகுத்தறிய வேண்டும்.

எரிபொருள்களுக்காக சாப்பாடு இன்றி, பல நாள்களாக வரிசைகளில் சகல இனங்களைச் சேர்ந்தவர்களும் எவ்விதமான பேதங்களுமின்றி நிற்கின்றனர். அவ்வாறானவர்களிடத்தில் சென்று, இனவாதத்தை கக்க முயலும் சரத் வீரசேகர போன்றவர்களுக்கு, அடுத்தடுத்த தேர்தல்களின் போது, மக்கள் நல்லபாடம் புகட்டுவார்கள்.

மீண்டும், மீண்டும் புலிப்பூச்சாண்டி காட்டுவதும், சிறுபான்மை இனங்களைச் சந்தேகக்கண்கொண்டு பார்க்கும் வகையில் போலியான பிரசாரங்களை முன்னெடுப்பதும் எதிர்காலத்தில் சாத்தியப்படாது. ஏனெனில், தற்போதைய நெருக்கடிகள் யாவும், இனம், மதம்,மொழி ஆகியவற்றைப் பார்த்து தனித்தனியாக வரவில்லை; இந்த நெருக்கடிகளில் சகல இனங்களையும் சேர்ந்தவர்களுமே ஒருங்கே பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாடு, நாட்டு மக்களின் எதிர்காலம், இன்றைய சிறுவர்களே நாளைய பிரஜைகள்; அவர்களின் எதிர்காலம், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முகங்கொடுக்கும் வகையிலான திட்டங்கள் போன்றவற்றை வகுக்காமல், வெறும் பிரிவினைவாதத்தை கக்கியவர்கள் மட்டும் இந்நிலைமைகளுக்கு பொறுப்பாளிகள் அல்ல; இனவெறுப்பு பேச்சுகளை உள்வாங்கி, இரத்தத்தை சூடேற்றிக்கொண்டு, அவர்களின் பின்னால்சென்று, பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு வழிசமைத்தவர்களும் பொறுப்பாளிகள் தான்.

ஆக, கடந்தகால தவறுகளை ஒரு படிப்பினையாகக் கொண்டு, எதிர்கால திட்டங்களை வகுத்து, முன்னோக்கி நகர்வதே காலத்தின் தேவையாகும் என்பதை சகலரும் புரிந்து நடத்தலே அவசியமாகும்.


தமிழ் Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

இருப்பதே காணும்; இதுவே திருப்தி என்று எத்தனை பேர் நினைக்கிறார்கள்? உலக சொத்துகள் அனைத்தும் கிடைத்தாலும், திருப்தி அடையாத எத்தனையோ மனிதர்கள், ஏக்கத்துடன் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

எவரோ பெரிய பணக்காரராக இருந்தால், தங்களுக்கும் ஏன் இப்படியான சந்தர்ப்பம் அமையவில்லை என எண்ணுவது அறியாமை. செய் தொழிலை ஒழுங்காகச் செய்யாமல், முயலாமல், மதுவுக்கு அடிமையானவர்கள் எல்லோரும், எந்தவித தகுதியும் இல்லாமல் செல்வந்தராவது எப்படி?

மனிதன் தன்னைத்தானே உருவாக்க வேண்டும்; பிறரை நம்பக்கூடாது. சிலர் அதிர்ஷ்டலாபச் சீட்டு மூலம் செல்வந்தராகலாம் என்று எண்ணுவதுண்டு. வராத வரவுகளை விட்டு, தன்னால் ஆன முயற்சியுடன், தேகத்தையும் அறிவையும் கொண்டு, தன்னை முழுமனிதனாக மாற்ற முயலவேண்டும்.

நித்திய ஆரோக்கியமாக வாழவும் உழைப்பைப் பெருக்கிக் கொள்ளவும் துணிச்சலும் தன்னம்பிக்கையும் முக்கியமானது. உறங்குவதைவிட, எழுவது அழகு; முயலவும்.

– பருத்தியூர் பால–வயிரவநாதன்

### இன்றைய நெருக்கடியில் இருந்து

# கற்க வேண்டிய பாடம்



புருஜோத்தமன் தங்கமயில்

நாடு அறிவிக்கப்படாத முழு முடக்கத்துக்குள் வந்துவிட்டது. பசி பட்டினிக்கான முன் அறிவிப்பை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளாந்தம் வெளியிட்டு வருகின்றார். போர் நீடித்த காலத்தில், நாட்டு மக்கள் கொண்டிருந்த பதற்றத்தைக் காட்டிலும், தற்போது மக்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல், மிகப்பெரியதாக மாறியிருக்கின்றது. வாழ்வதற்கு தகுதியில்லாத நாடாக இலங்கை இன்று நோக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையை ஏற்படுத்திவிட்ட அரசாங்கம், இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள், மேற்கு நாடுகள் என்று பல நாடுகளுக்கு, அமைச்சர்களையும் அதிகாரிகளையும் அனுப்பி, கடன்களை கோரி வருகின்றது.

இன்னொரு பக்கம், ரணிலுக்கு பிரதமர் பதவியை வழங்கிவிட்டு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தன்னுடைய கடந்த கால முறையற்ற நிர்வாகத்தையே மேற்கொண்டு வருகின்றார்.

பிரதமர் பதவி மாத்திரமல்ல, நிதி அமைச்சும் இன்று ரணிலிடமே இருக்கின்றது. ஆனால், அவரை அழைக்காமல், திறைசேரியின் ஆணையாளரையும் அதிகாரிகளையும் அழைத்து, எப்படியாவது எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் கடன்களைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை உறுதிப்படுத்துமாறும், ஜனாதிபதி கோட்டா கோருகிறார்.

நாட்டின் நிதிநிலை என்ன என்பது அனைவருக்கும் தெரியும். அப்படியிருக்கும் போது, நிதி அமைச்சரான ரணிலை அழைக்காமல், அறிவுறுத்தல் வழங்கும் கூட்டத்தை கோட்டா நடத்துவது என்பது, நாட்டை இவ்வளவு மோசமான நிலைக்குத் தள்ளிய பின்னரும், அவர் கற்றுக்கொண்டது மாதிரி தெரியவில்லை.

தான் தோற்றுப்போன ஜனாதிபதி என்பதை, கோட்டா ஏற்றுக்கொண்ட போதும், பதவியிலிருந்து விலகி, நாட்டின் நிர்வாகத்தை சீராக முன்னெடுப்பதற்கான வாய்ப்புகளை, அவர் சிந்திக்கிறார் இல்லை.

ஏனெனில், ராஜபக்ஷர்களின் இறுதி எச்சம், ஆட்சிப்பீடத்தில் இருக்கும் வரையில், இலங்கைக்கான உதவிகளை வழங்குவதில்லை என்ற தோரணையிலேயே சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட பல தரப்புகளும் இருக்கின்றன.

கடன்களையும் உதவித் திட்டங்களையும் பெறும்போது, ராஜபக்ஷர்கள் காட்டும் அடக்கத்தை, அதைத் திருப்திச் செலுத்தும் போது காட்டுவதில்லை.

மாறாக, கடன்களை திரும்பச் செலுத்துவதற்கான எந்தவித வாய்ப்புகளையும் ஏற்படுத்தாமல், நாட்டின் கடன் சுமையை இன்னும் இன்னும் அதிகரிப்பது சார்ந்தே அவர்கள் செயற்பட்டு வந்திருக்கிறார்கள்.

அத்தோடு, வெளிநாடுகளிடமும் சர்வதேச அமைப்புகளிடமும் பெறப்பட்ட கடன்களில் கணிசமான பகுதியை, ராஜபக்ஷர்கள் ஊழல், மோசடி வழிகளால் சுருட்டிவிட்டார்கள் என்கிற உண்மை யாவரும் அறிந்தவை!

அப்படியான நிலையில், ராஜபக்ஷர்களின் இறுதி எச்சம் வரை அகற்றிய பின்னரே, இலங்கைக்கான உதவிகளை வழங்குவது குறித்து, அந்தத் தரப்புகள் சிந்திக்கின்றன. இதனை, ரணில் பிரதமராகப் பதவியேற்றது முதல், அவரிடமே வெளிப்படையாக அறிவித்தும் விட்டன.

அதனால்தான், வெளிநாட்டு ஊடகங்களிடம் பேசும் அனைத்துத் தருணங்களிலும், "ராஜபக்ஷர்களின் கடந்த கால ஆட்சிகளே, நாட்டின் இப்போதையை சீரழிவுக்குக் காரணம்" என்று ரணில் குற்றஞ்சாட்டி வருகின்றார்.

அதைவிடுத்து, நாட்டுக்கு உதவிகளையோ, கடன்களையோ கொண்டு வரும் எந்த மார்க்கங்களையும் அவரால் கண்டடைய முடியவில்லை.

கோட்டாவை, ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்தியதில் பௌத்த-சிங்கள இனவாத தரப்புகள் முதன்மை வகித்தன. அவரை, 'பௌத்தத்தின் காவலர்', 'அபிவிருத்தியின் நாயகன்', 'பாதுகாப்பின் நம்பிக்கை' என்றெல்லாம் அடையாளப்படுத்தின. அவரால்தான் நாட்டைக் காப்பாற்ற முடியும் என்று கூவித்திரிந்தார்கள்.

ஆனால், இன்றைக்கு அந்தத் தரப்புகள் எல்லாமும், "நாங்கள் பாவம் செய்துவிட்டோம்" என்று, பொது வெளியில் கதறத் தொடங்கிவிட்டன.

ராஜபக்ஷர்களுக்கு நாட்டை மீண்டும் வழங்கக் கோரியதன் மூலம், வரலாறுக்கும் மீள முடியாத கரும்புள்ளி, தங்களில் பதிந்துவிட்டதாக அவர்கள் ஒப்பாரி வைக்கின்றனர். பௌத்த பீடங்கள் தொடங்கி, இனவாதத்தை வளர்த்த அனைத்துத் தரப்புகளும், இன்றைக்கு சிங்கள மக்களுக்கு பதில் சொல்ல வேண்டி வந்திருக்கின்றது.

இன்றைக்கு எதிர்கொள்ளும் நெருக்கடி போன்று ஒன்றை, தென்னிலங்கை கடந்த 70 வருடத்தில் சந்தித்ததில்லை. சிறீமாவின் ஆட்சிக் காலத்தில், உணவுப் பொருட்களுக்காக மக்கள் வரிசையில் நின்ற வரலாறு உண்டுதான்.

ஆனால், வரிசையில் நிற்கும் போது, உணவுப்பொருட்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் உறுதியும் இருந்தது. வரிசையில் நின்றவர்கள், பொருட்கள் கிடைக்காமல் வீட்டுக்கு சென்றதில்லை.

ஆனால், ராஜபக்ஷர்கள் ஏற்படுத்திவிட்ட இன்றைய சீரழிவு நாள்களில், எரிபொருட்களுக்காகவோ, சமையல் எரிவாயுவுக்கோ நாள்கணக்கில், மாதக்கணக்கில் வரிசையில் நின்றாலும், அது கிடைக்கும் என்று எந்த உத்தரவாதத்தையும் யாரிடமும் பெற்று கொள்ள முடியாது.

எரிபொருள் விநியோகத்துக்காக வரிசையில் நின்றவர்களுக்கு 'டோக்கன்' வழங்கும் முறையை அறிமுகப்படுத்தி, அதை பொலிஸ், இராணுவத்தினரைக் கொண்டு நடைமுறைப்படுத்திய மறுநாள், எரிபொருள் விநியோகத்தை அரசாங்கம் நிறுத்தியிருக்கின்றது.

வரிசையில் நின்றவர்கள், வீழ்ந்து இறக்கும் சம்பவங்கள் அடிக்கடி நிகழும் நாடாக, தற்போது இலங்கை பதிவாகி வகின்றது.

இவ்வளவு சீரழிவின் பின்னரும், பௌத்த பேரினவாதப் பேச்சைப் பேசினால், தப்பித்துக் கொள்ளலாம் என்று சரத் வீரசேகர போன்ற முன்னாள் அமைச்சர்கள் நினைக்கிறார்கள். ஆனால், வயிற்றுப்பசிக்கு முன்னால், இந்த இனவாதப் பேச்செல்லாம் எடுபடாது என்று, சரத் வீரசேகரவுக்கு நடுவீதியில் வைத்து சிங்கள மக்கள் போதித்திருக்கிறார்கள்.

அதுவும், அவரை நோக்கி நடுவிரலை உயர்த்திக் காட்டும் அளவுக்கான கோபம் எல்லாம், மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது என்றால், இனவாதம் பேசி ஆட்சிக்கு வந்து அலைக்கழித்தவர்கள் மீது, மக்கள் என்ன மாதிரியான வெறுப்பில் இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள முடியும்.

ராஜபக்ஷர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும், மத்திய கிழக்கு நாடுகளின் உதவியில் இயங்கிய உள்நாட்டு அமைப்புகளைத் தடை செய்யவும், நெருக்கடி வழங்கவும் தொடங்கியது. சில அமைப்புகளை இஸ்லாமிய தீவிரவாத இயங்கங்கள் என்ற அடையாளம் வழங்கி, சிலரைக் கைது செய்யவும் செய்தது. குறிப்பாக, கட்டாரின் உதவித் திட்டத்தில் இயங்கிய உள்நாட்டு அமைப்புகளை அதிகமாகவே அலைக்கழிக்கும் வேலைகளில் ராஜபக்ஷர்கள் இயங்கினார்கள்.

ஆனால், இன்றைக்கு எரிபொருளுக்கான கடன் உதவிக்காக, கட்டாரிடம் எரிபொருள் அமைச்சரான காஞ்சன விஜயசேகர சென்றிருக்கின்றார். தனக்குத் துணையாக, முஸ்லிம் அமைச்சர் என்பதற்காகவே சுற்றாடல் அமைச்சரான நஸீர் அஹமட்டையும் அவர் அழைத்துச் சென்றிருக்கின்றார்.

ராஜபக்ஷர்கள் ஆட்சிக்கு வந்ததும், அலி சப்ரி என்கிற ராஜபக்ஷர்களின் விசுவாசியைத் தவிர, எந்த முஸ்லிமையும் அமைச்சரவைக்குள் இணைத்துக் கொள்ளவில்லை. ஏன், பிரதி அமைச்சுப் பதவி கூட வழங்கவில்லை.

முஸ்லிம் கட்சிகளும் அதன் தலைவர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும், தீவிரவாதிகள் போன்ற தோரணையிலேயே தென் இலங்கை பூராவும் காட்சிப்படுத்தியும் வந்தனர்.

ஆனால், நாட்டை சீரழித்து முடித்த பின்னர், நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு, கட்டார் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளிடம் கையேந்துவது குறித்து, எந்த வெட்கத்தையும் அவர்கள் படவில்லை. நாட்டிலுள்ள முஸ்லிம்களையும் அவர்களின் மார்க்க வழிமுறையையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி, பௌத்த சிங்கள பேரினவாத அடக்குமுறை புரிந்த ராஜபக்ஷர்களுக்கும், அவர்களின் விசுவாசிகளுக்கும், இன்றைக்கு மத்திய கிழக்கு நாடுகள் இனிக்கத் தொடங்கிவிட்டன.

ஆனால், மத்திய கிழக்கு நாடுகள் ராஜபக்ஷர்களின் கடந்த கால ஆட்சியைக் கருத்தில் கொண்டு, உதவி வழங்குவது குறித்து நிறையவே சிந்திக்கின்றன.

நாட்டு மக்கள், குறிப்பாக தென் இலங்கை மக்கள், இன்றைய நெருக்கடியில் இருந்து படித்துக் கொள்வதற்கு பல செய்திகள் உண்டு. அதில், பிரதானமானது, இனவாத மதவாத சிந்தனை கொண்ட அரசியலை புறந்தள்ள வேண்டியதன் அவசியமாகும். இல்லையென்றால், காலனித்துவத்திலிருந்து சுதந்திரம் பெறும்போது, ஆசியாவின் முதன்மை நாடுகளில் பட்டியலில் இருந்த இலங்கை, இன்று எப்படி இனவாத அரசியலால் சீரழிந்திருக்கின்றதோ, இதைவிட இன்னும் படுமோசமாக சீரழிந்துவிடும்.

அப்போது, இந்த நாடு, யாருக்கும் வேண்டாத, எல்லோராலும் புறக்கணிக்கப்பட்ட ஒரு நாடாக மாறும்.

## கடிதங்கள்

### விவசாயிகள் நெருக்கடியில்

முல்லைத்தீவு, அம்பலப்பெருமாள் குளத்தில் சிறுபோக நெற்செய்கை அறுவடை மேற்கொள்வதில் விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

குளத்தின் வேலைகள் முன்னெடுக்கப்பட வேண்டி உள்ளதால், கடந்த காலபோக அறுவடையுடன் சிறுபோக நெற்செய்கை முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. 330 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் எரிபொருள் நெருக்கடியால் அறுவடை மேற்கொள்வதில் நெருக்கடியை விவசாயிகள் எதிர்கொண்டுள்ளனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊடாக எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு விவசாயிகள் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

எரிபொருள் விரைவாக கிடைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது எரிபொருள் நெருக்கடியால் அறுவடையை மேற்கொள்வதில் பலத்த நெருக்கடியை விவசாயிகள் எதிர்கொண்டுள்ளனர்.

சிறுபோக பயிர்ச் செய்கைத் தொடக்கத்திலும் நிலப் பண்படுத்தலுக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊடாகவே எரிபொருளைப் பெற்று, விதைப்பில் விவசாயிகள் ஈடுபட்ட நிலையில் தற்போதும் எரிபொருளினை பெற்றுக் கொள்ள முடியாது இருப்பதாக விவசாயிகளால் அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக அறுவடை தொடங்கி உள்ள கிராமமாக அம்பலப்பெருமாள்குளம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நடராசா கிருஸ்ணகுமார்

தலிபான் மனநிலையை

# இந்திய முஸ்லிம்கள் அனுமதிக்கமாட்டார்கள்

## ஆஜ்மீர் தர்கா தலைவர் கண்டனம்

தலிபான் மனநிலையை இந்திய முஸ்லிம்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்று கூறிய ஆஜ்மீர் தர்காவின் தலைவர் தீவான் ஜைனுல் அப்தீன் அலி கான், உதய்பூர் சம்பவத்தையும் கண்டித்துள்ளார்

“மனிதர்களுக்கு எதிராக எந்த மதமுமே வன்முறையை போதிக்கவில்லை. குறிப்பாக, இஸ்லாம் மதம் அமைதியையே வலியுறுத்துகிறது. இணையத்தில் வெளியான மிக மோசமான வன்முறை வீடியோ பதறவைக்கிறது. அதைச் செய்தவர்கள், எவ்வித நேர்மையும் இல்லாதவர்கள். ஏழை நபர் மீது மிகக் கொடூரமான தாக்குதலை




நடத்தியுள்ளனர். அவர்கள் வன்முறையை பாதையாகக் கொண்டவர்கள். இந்தச் சம்பவத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்தியாவில் தலிபான் மனநிலை ஓங்க, இந்திய முஸ்லிம்கள் அனுமதிக்க மாட்டோம். எங்கள் தாய்நாட்டை பாதுகாப்போம்” என்றார்.

ராஜஸ்தான் மாநிலம், உதய்பூர் நகரிலுள்ள மால்தாஸ் பகுதியில் கன்னையா லால் என்பவர் தையல் கடை நடத்தி வந்தார். அவரது கடைக்குள் நேற்று முன்தினம் (28) அத்துமீறி புகுந்த 2 பேர், அங்கு வேலை செய்து கொண்டிருந்த கன்னையா லாலை வலுக்கட்டாயமாக இழுத்துச்சென்று, பொது இடத்தில் வைத்து அவரது தலையை துண்டித்தனர். இந்தச் சம்பவத்தை வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் வெளியிட்டனர். மேலும் பிரதமர் மோடிக்கும் கொலை மிரட்டல் விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## யாரிடம் சொல்லியழ?

வேலூரில் காளிகாம்பாள் கோவில் வீதியிலுள்ள தனது கடைக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் சேர்த்து, கொங்கிரீட் போடப்பட்டுள்ளது.

இந்தியா

## கலவரத்துக்கு பா.ஜ.க முயற்சி

அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அ.தி.மு.க) பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க) அடிமையாகிவிட்டது என்று குற்றஞ்சாட்டியுள்ள தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ்.அழகிரி, இந்தியாவில் மீண்டும் கலவரத்தை உருவாக்க பா.ஜ.க முயல்கிறது என்றார்.

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தியவர்களை கண்டித்து, இஸ்லாமிய கூட்டமைப்பின் சார்பாக நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர். இதில் காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே. எஸ். அழகிரி கலந்துகொண்டார்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்தவர்,



“பாரதிய ஜனதா கட்சி இந்தியாவில் மீண்டும் ஓர் இனக்கலவரத்தை உருவாக்க முயல்கிறது. குஜராத்தின் முதலமைச்சராக மோடி இருந்தபோது, மிகப்பெரிய இனக்கலவரத்தை உருவாக்கினார். இதில் 2,000 பேர் கொல்லப்பட்டார்கள். அந்த 2,000 பேரும் இஸ்லாமியர்கள்தான். அதற்குக் காரணம் யார் என்பது தெரியாமல் போய்விட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் விடுதலையானார்கள். அதேபோல மீண்டுமொரு கலவரத்தை உருவாக்க பா.ஜ.க முயல்கின்றது என்றார்.

புதுடெல்லி

சோனியாவின் உதவியாளர் மீது

## பாலியல் வன்புணர்வு வழக்கு

சோனியா காந்தியின் உதவியாளர் பிபி மாதவன் (71) தலித் பெண் ஒருவரை திருமணம் செய்துகொள்வதாகவும் வேலை வாங்கித் தருவதாகவும் கூறி, மாதவன் பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறப்படுகிறது. அதுதொடர்பில், புதுடெல்லி பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

முதற்கட்ட தகவல்களில்படி, தலித் பெண் ஒருவரை திருமணம் செய்துகொள்வதாகவும் வேலை வாங்கித் தருவதாகவும் கூறி, மாதவன் பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறப்படுகிறது.

அந்தப் பெண்ணின் மறைந்த கணவர் 2020ஆம் ஆண்டு காலமாகும் வரை, புதுடெல்லியில் உள்ள காங்கிரஸ் அலுவலகத்தில் ஊழியராக பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உத்தரப் பிரதேசம்

## ரொட்டி சர்ச்சையில் ஒருவர் படுகொலை

ரொட்டி வாங்குவது தொடர்பாக எழுந்த சர்ச்சையில், 30 வயதான நபரொருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் உத்தரப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தனது பிறந்த நாள் விழா கொண்டாட்டத்துக்காக 150 ரொட்டிகளை ஹோட்டலில் ஓடர் செய்துள்ளார். இதற்கான தொகையையும் செலுத்தியுள்ளார்.

ரொட்டிகளை வாங்கிக் கொள்வதற்காக கடைக்கு சென்றபோது, கடை உரிமையாளர் 40 ரொட்டிகளை கொடுத்துள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்தவர், கடை உரிமையாளருடன் வாக்குவாதம் செய்தார். வாக்குவாதம் சண்டையாக மாறியது. பலமாகத் தாக்கப்பட்டமையால் ரொட்டி ஓடர் செய்தவர் உயிரிழந்துள்ளார்.

இந்தியா



## நாளை முதல் பிளாஸ்டிக் தடை

ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டுக்கும் ஜூலை முதலாம் திகதி முதல், நாடு முழுவதும் தடை விதிக்கப்படுவதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அறிவித்துள்ளது.

மக்காத தன்மை கொண்ட நெகிழியின் பயன்பாட்டால் உலக அளவில் சுற்றுச்சூழலுக்கும் உயிரினங்களுக்கும் முக்கியமாக கடல் வாழ் உயிரினங்களுக்கும் ஆபத்துகள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. இதைச் சரி செய்யவேண்டிய அவசர நிலையில் உலக நாடுகள் இயங்கி வருகின்றன.

இந்தியாவில் 2009ஆம் ஆண்டு முதன் முறையாக ஹிமாலச்சலப் பிரதேசத்தில் நெகிழிப் பொருட்கள் பயன்பாடு தடை செய்யப்பட்டது. 2019ஆம் ஆண்டு தமிழகத்தில் தடை விதிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, ஜூலை 5 முதல் ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு பஞ்சாப் அரசும் தடை விதித்தது. ஜூலை 1 முதல் நாடு முழுவதும் தடை செய்யப்படும் என மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் அறிவித்துள்ளது.



சென்னை

## தமிழகம் முழுவதும் பாதுகாப்பு ஒத்திகை

கடல் வழியாக தீவிரவாதிகள் ஊடுருவலைத் தடுக்கும் வகையில், தமிழகம் முழுவதும் உள்ள கடலோர மாவட்டங்களில் பாதுகாப்பு ஒத்திகை நடந்து வருகிறது. அதன்போது, மாறு வேடத்தில் ஆயுதங்களுடன் நுழைய முயன்ற பொலிஸார் கைதுசெய்யப்பட்டனர்.

2008இல் கடல் வழியாக மும்பைக்குள் நுழைந்த தீவிரவாதிகள், பயங்கர தாக்குதல் நடத்தினர். இதில், 150க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இதுபோல மீண்டும் ஒரு தாக்குதல் நடந்துவிடக் கூடாது என்பதில் மத்திய, மாநில அரசுகள் உறுதியாக உள்ளன. அதனடிப்படையில், நாட்டின் கடல் எல்லைகளில் பாதுகாப்பும் தீவிரப்படுத்தப்பட்டது. இதன் ஒரு பகுதியாக, அனைத்து மாநிலங்களிலும் அவ்வப்போது பாதுகாப்பு ஒத்திகை நடத்தப்படுகிறது.

கடல் வழியாக தமிழகத்துக்குள் தீவிரவாதிகள் ஊடுருவினால், அதை தடுப்பது குறித்து 6 மாதங்களுக்கு ஒருமுறை தீவிரவாத தடுப்பு ஒத்திகை ‘ஒபரேஷன் சாகர் கவச்’ நடத்தப்பட்டு வருகிறது.




## செயன்முறை விழிப்புணர்வு



தற்போதைய நிலையில் பொதுமக்களுக்கு உப உணவுத் தேவைக்கான வீட்டுத்தோட்ட பயர்ச்செய்கையை உக்குவிப்பதற்கான தொழில்நுட்பப் பயிற்சியுடன் கூடிய செயல்முறை விழிப்புணர்வுப் பயிற்சி, மட்டக்களப்பு, கல்லடி ஆனந்தசாலை மண்டபத்தில், புதன்கிழமை (29) நடைபெற்றது. தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையில், மட்டக்களப்பு மாவட்ட சர்வமத அமைப்பின் சகவாழ்வுக் குழுவினரால் இனங்களிடையே நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கோடு காத்தான்குடி– மஞ்சந்தொடுவாய் எல்லையில் மயிலத்தமடு, மாதவனை கிராமங்களிலுள்ள பிரமுகர்கள், மதத் தலைவர்கள் உள்ளிட்டோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

ஏ.எச்.ஏ. ஹுஸைன்






## விஜயம்

முல்லைத்தீவு, விசுவமடு பகுதியில் அமைந்துள்ள பனை, தென்னை கூட்டுறவு சங்கத்தின் தலைமைக் காரியாலயத்துக்கு ஜப்பானிய தூதுவர் நேற்றுமுன்தினம் (28) விஜயம் மேற்கொண்டிருந்தார்.
இலங்கை மற்றும் ஜப்பான் நாடுகளின் கூட்டுறவுவின் அடையாளமாக, ஜப்பான் அரசின் நிதிப்பங்களிப்பில் நன்கொடையாக வழங்கப்பட்ட தேங்காய் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கு 2 மில்லியன் ரூபாய் பெறுமதியான இயந்திரமொன்று 2021 ஆண்டு வழங்கப்பட்டது. அதையும் பார்வையிட்டார்.

(யது பாஸ்கரன்)



## பாதயாத்திரை



யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் இருந்து மன்னார், மடு திருத்தலத்துக்கான பாதயாத்திரை, திங்கட்கிழமை (27) ஆரம்பிக்கப்பட்டது.
நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் மடு அன்னையின் பக்கத்தர்கள், தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவு செய்வதற்காக, பாதயாத்திரையை மேற்கொண்டு வருகின்றனர்.
வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு கப்பலேந்தி மாதா தேவாலயத்திலிருந்து பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டது. பக்தர்கள் மடு திருத்தலத்தில் ஆடிமாதம் 02 ஆம் திகதி இடம்பெறும் உற்சவத்தில் கலந்துகொள்வர்.

(செ. கீதாஞ்சன்)



## சந்திப்பு



ஆசியாவுக்கான திறைசேரி துணைச் செயலாளர் ரொபர்ட் கப்ரோத், தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான துணை இராஜாங்கச் செயலாளர் கெல்லி கெய்டர்லிங் தலைமையிலான அமெரிக்காவின் திறைசேரித் திணைக்களம் மற்றும் இராஜாங்கத் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட பிரதிநிதிகளை, வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன கொழும்பில் உள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து ஜூன் 28 ஆம் திகதி சந்தித்தார்.

ஜோர்தான்

# கிரேனில் இருந்து நழுவி விழுந்த கொள்கலன்

### 12 பேர் உயிரிழப்பு

ஜோர்டானில் அகுவாபா துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பலொன்றில் இருந்து 27 ஆம் திகதி, கிரேனின் உதவியுடன் பெரிய கொள்கலனொன்றை இறக்கும் பணியில் துறைமுக பணியாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது குறித்த கொள்கலன் திடீரென கிரேனிலிருந்து நழுவி கப்பலில் விழவே, அதிலிருந்து மஞ்சள் நிற விஷவாயு பெருமளவில் பரவி, அந்த பகுதியை சுற்றிலும் சூழ்ந்தது.

இதையடுத்து குறித்த பகுதியிலிருந்த துறைமுக பணியாளர்கள் தப்பியோடியதுடன், அத் துறைமுகத்திற்கு அருகே உள்ளவர்களும் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.




இந்நிலையில் குறித்த விஷவாயுவைச் சுவாசித்த 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் குறித்த விஷவாயு அடங்கிய கொள்கலன் விழுந்ததில், 251 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில், வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.







### அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# இலங்கைக்கு 212 ஓட்டங்கள்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்டில், தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 212 ஓட்டங்களை இலங்கை பெற்றுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், காலியில் நேற்று ஆரம்பித்த இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையின் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

இலங்கை சார்பாக டெஸ்ட் போட்டிகளில் சுழற்பந்துவீச்சாளர் ஜெஃப்ரி வன்டர்சே அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை நிதானமாக ஆரம்பித்தது. பின்னர் பதும் நிஸங்க, குசல் மெண்டிஸை குறுகிய இடைவெளிகளில் அணித்தலைவர் பற் கமின்ஸ், மிற்செல் ஸ்டார்க்கிடம் பறிகொடுத்தது.

கருணாரத்னவை குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் நேதன் லையனிடம் பறிகொடுத்த இலங்கை, தனஞ்சய டி சில்வா மற்றும் தினேஷ் சந்திமாலை அடுத்தடுத்து மிற்செல் ஸ்வெப்ஸனிடம் பறிகொடுத்தது.

பின்னர் லையனிடம் 39 ஓட்டங்களுடன் அஞ்சலோ மத்தியூஸை இழந்தபோதும் நிரோஷன் டிக்வெல்ல, ரமேஷ் மெண்டிஸ் மூலம் வேகமாக ஓட்டங்களைச் சேகரித்தது. பின்னர் முறையே 22, 58 ஓட்டங்களுடன் மெண்டிஸும், டிக்வெல்லவும் லையனிடம் வீழ்ந்தனர்.

எஞ்சிய இரண்டுவிக்கெட்டு களையும், லையன்,ஸ்வப்ஸனும் கைப்பற்ற தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டு களையும் இழந்து 212 ஓட்டங்களையே இலங்கை பெற்றது.

பிரித்தானியா

# கழிவறைக்கு சென்ற மாணவி தாயானார்

பிரித்தானியாவில் சவுத்தாம்ப்டன் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் ஜெஸ் டேவிஸ் (20) என்ற மாணவி, 12 ஆம் திகதி தனது நண்பரின் பிறந்த நாளைக் கொண்டாட அவரது வீட்டிற்குச் சென்றுள்ளார்.

இதன் போது அவருக்கு கடுமையான வயிற்று வலி ஏற்பட்டதால், இது மாதவிடாய்க்கான அறிகுறி என நினைத்து கழிவறைக்குச் சென்றுள்ளார்.

அங்கு, அவர் எதிர்பாராத விதமாக ஆண் குழந்தையொன்றை பிரசவித்துள்ளார்.

இந்நிலையில் இது குறித்து கருத்து தெரிவித்த அவர், "நான் கர்ப்பம் தரித்ததற்கான எந்த அறிகுறியும் எனக்குத் தென்படவில்லை. எனக்கு மாதவிடாய் சுழற்சி எப்போதும் ஒழுங்கற்ற முறையில் இருக்கும். அதனால் தான் உண்மையில் இதைக் கவனிக்கவில்லை. எனக்கு சில சமயங்களில் குமட்டல் மட்டும் ஏற்பட்டது. நான் புதிய மருந்து சாப்பிட ஆரம்பித்தேன். பிறகு அதையும் நிறுத்திவிட்டேன். என் வாழ்க்கையில் மிகவும் அதிர்ச்சியான சம்பவம் என்றால் அது இதுதான்" இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மூன்று கிலோ கிராம் எடை கொண்ட அக் குழந்தை இன்குபேட்டரில் தற்போது வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அக் குழந்தை 35 வாரங்களில் பிறந்துள்ளதாகவும், தாயும் சேயும் தற்போது நலத்துடன் உள்ளனர் எனவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.



# வட்ஸ்அப்பில் மாதவிடாய்

பெண்களுக்கான மாதவிடாய் தகவல்களைப் பதிவு செய்ய நினைவூட்ட, இன்றைய காலத்தில் பல்வேறு செயலிகள் வந்துவிட்டன.

இந்நிலையில் இது தொடர்பான தகவல்களைத் தெரிந்து கொள்ளவும், உடல் ஆரோக்கியத்தை கண்காணிக்கவும் வட்ஸ்அப் செயலியானது, ஒரு புதிய வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. பெண்கள் தனது அலைபேசியில் சிரோனா +9718866644 என்ற இந்த வணிக வட்ஸ்அப் கணக்கு எண்ணுக்கு 'ஹாய்' என செய்தி அனுப்ப வேண்டும். பின்னர் கேட்கப் படும் கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டும்.

குறித்த விவரங்களை அளிக்கும் பட்சத்தில், ஒவ்வொரு மாதமும் தமது மாதவிடாய் குறித்த விவரங்களை தெரிந்து கொள்ள, சரிபார்க்க, நினைவூட்ட, ஆரோக்கியத்தை கண்காணிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சம்பியனான நிந்தவூர்

■ நூருல் ஹுதா உமர்



அம்பாறை மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலகத்துக்குட்பட்ட அணிகள் பங்குபற்றிய பூப்பந்தாட்டத் தொடரில் நிந்தவூர் சம்பியனானனது.

அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கல்முனையை வென்றே நிந்தவூர் சம்பியனாயிருந்தது.

அந்தவகையில், நீண்ட காலத்துக்குப் பிறகு மாகாண மட்டப் போட்டிகளுக்கு நிந்தவூர் தெரிவாகியுள்ளது.

# ஓய்வை அறிவித்த மோர்கன்

இங்கிலாந்தின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான அணித்தலைவர் ஒய்ன் மோர்கன், சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து தனது ஓய்வை அறிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை இங்கிலாந்துக்குப் பெற்றுக் கொடுத்திருந்த 35 வயதான மோர்கன், 2006ஆம் ஆண்டு அயர்லாந்துக்காக அறிமுகத்தை மேற்கொண்டு 248 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 7,701 ஓட்டங்களையும் 115 இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளில் 2,458 ஓட்டங்களையும் பெற்றதோடு 16 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடியிருந்தார்.






### விம்பிள்டன் டென்னிஸ் தொடர்:

# வெளியேற்றப்பட்ட செரீனா

பிரித்தானியாவில் நடைபெற்றுவரும் விம்பிள்டன் டென்னிஸ் தொடரிலிருந்து 23 தடவைகள் கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற செரீனா வில்லியம்ஸ் வெளியேற்றப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தனது முதலாவது சுற்றுப் போட்டியில் பிரான்ஸின் ஹார்மனி தானை எதிர்கொண்ட ஐக்கிய அமெரிக்காவின் வில்லியம்ஸ், 5-7, 6-1, 6-7 (7-10) என்ற செட் கணக்கில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

செனகல்

### உலகிலேயே அதிக பின்தொடர்வோரை

# கொண்டவர் இவர் தான்

உலகிலேயே அதிகளவான மக்கள் பின்தொடரும் 'டிக் டொக்', 'யூ டியூப்' பிரபலம் என்ற பெருமையை செனகல் நாட்டை சேர்ந்த காபே லேம் பெற்றுள்ளார்.

இதுவரை காலமும் அமெரிக்காவைச் சேர்ந்த சார்லி டி அமிலியோ என்ற 18 வயதான யுவதியே யூடியுபில் அதிக பின்தொடர்வோரைக் கொண்டவர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருந்தார். இந்நிலையில் காபே லேம் அப் பெண்ணின் சாதனையை தற்போது முறியடித்துள்ளார்.

சென‌கல் நாட்டை சேர்ந்த காபே லேம் தற்போது இத்தாலி நாட்டில் வாழ்ந்து வருகிறார். இவர் இத்தாலியில் தொழிற்சாலை ஒன்றில் இயந்திர கண்காணிப்பாளராகப் பணியாற்றி வருகின்றார்.

இந்நிலையில், 2020 ஆம் ஆண்டு கொரோனாப் பொது முடக்கத்தால் வேலையை இழந்த அவர், பொழுதுபோக்காக டிக் டொக்கில் வீடியோக்களை



பதிவேற்ற ஆரம்பித்துள்ளார்.

குறிப்பாக, இணையத்தில் பிரபலமான வீடியோக்களுக்கு முகபாவனைகள் மூலம் நகைச்சுவை ஏற்படுத்தும் வகையில் வீடியோக்களை பதிவேற்றி வந்துள்ளார். இந்நிலையில் நாளடைவில் குறித்த வீடியோக்கள் வைரலாகவே, அவரை டிக்டொக்கிலும் யூடியுபிலும் பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்துள்ளது.

அந்தவகையில் தற்போது அவரை 142.9 மில்லியனுக்கும் மேற்பட்டோர் டிக்டொக்கில் பின்தொடர்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளம்

# பாணி பூரிக்கு தடை

நேபாளத்தின் காத்மாண்டு பகுதியில் பாணி பூரி விற்பனைக்கு தடை விதித்து அந்நாட்டு அரசு அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

அந்நாட்டில் அண்மைக்காலமாக வாந்திபேதியால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும், பாணிபுரிக்குப் பயன்படுத்தப்படும் பாணியில் 'விபிரியோ காலரே' (Vibrio cholerae) எனப்படும் பக்றீரியா அதிகளவில் பெருகி வருவதாலும் இத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் வாந்திபேதிக்கான அறிகுறி எவையேனும் தென்பட்டால் பொதுமக்கள் அருகில் உள்ள மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் என்றும் ,கோடை மற்றும் மழைக்காலங்களில் பரவும் வயிற்றுப்போக்கு, கொலரா போன்ற நோய்கள் குறித்து ஒவ்வொருவரும் எச்சரிக்கையுடனும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும் என அரசு தெரிவித்துள்ளது.

### அயர்லாந்துக்கு எதிரான தொடரை

# 2-0 எனக் கைப்பற்றிய இந்தியா



அயர்லாந்துக்கெதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரை 2-0 என இந்தியா கைப்பற்றியது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்றிருந்த இந்தியா, டப்ளினில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே தொடரை 2-0 எனக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 225/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: தீபக் ஹூடா 104 (57), சஞ்சு சாம்ஸன் 77 (42), சூரியகுமார் யாதவ் 15 (05), ஹர்டிக் பாண்டியா ஆ.இ 13 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்க் அடைர் 3/42 [4], கிறேய்க் யங் 2/35 [4], ஜொஷ் லிட்டில் 2/38 [4])

அயர்லாந்து: 221/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அன்டி போல்பிரயன் 60 (37), போல் ஸ்டேர்லிங் 40 (18), ஹரி டெக்டர் 39 (28), ஜோர்ஜ் டோக்ரல் ஆ.இ 34 (16), மார்க் அடைர் ஆ.இ 23 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: அக்ஸர் பட்டேல் 0/12 [2], ரவி பிஷ்னோய் 1/41 [4], உம்ரான் மலிக் 1/42 [4])

போட்டியின் நாயகன்: தீபக் ஹூடா

தொடரின் நாயகன்: தீபக் ஹூடா

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வியாழக்கிழமை, 30 ஜூன் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.